
# கலை இலக்கியக் களமும் கடந்த காலமும்

## வரலாற்றுக் குறிப்பேடு – 3



தொகுப்பு :

இலக்கிய வித்தகர் கோகிலா மகேந்திரன்

திருமதி ராஜி கெங்காதரன்

கலை இலக்கியக் களம் – தெல்லிப்பழை

நூறாவது நிகழ்வு வெளியீடு - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Lebara Library, Kanambigaikulam, Kilinohchi.

### முக்கிய அறிவித்தல்

நீங்கள் எடுத்துச் செல்லும் புத்தகத்தில் கீறுதல், வெட்டுதல், கிழித்தல், அழித்தல், அழுக்குப்படியவிடல் மற்றும் ஊறுபாடுகளைச் செய்ய வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும் பொழுது இப்படியான குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். அல்லாவிடில் நீங்கள் எடுத்துச் சென்ற புத்தகம் நல்ல நிலையில் இருந்ததெனக் கருதப்படுவதுடன் ஊறுபாடுகளுக்கு நூலகப் பொறுப்பாளரினால் விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியக் களமும் கடந்த காலமும்

வரலாற்றுக் குறிப்பேடு – 3

54

Library
Educational Resource Centre
87, Kanahambigaikulam
Kilinochchi.

*தொகுப்பு :*

இலக்கிய வித்தகர் **கோகிலா மகேந்திரன்**

**திருமதி ராஜி கெங்காதரன்**

Director
Lehara Library
Educational Resource Centre
7, Kanahambigaikulam
Kilinochchi.

**கலை இலக்கியக் களம் – தெல்லிப்பழை**

நூறாவது நிகழ்வு வெளியீடு

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களத்தின் தமிழ் வாழ்த்து

புலவர் ம. பார்வதிநாதசிவம்

கனி மொழியே தனிமொழியே கவின் மொழியே வாழ்க
கற்பனையே அற்புதமே பொற்புருவே வாழ்க
பனிமலரே எனதுயிரே நனிசுவையே வாழ்க
பானிலவே வானமுதே தேனனையாய் வாழ்க

இயலென்றே நீ வளர்ந்தாய் இவ்வுலகோர் மகிழ்ந்தார்
இசையென்றே நீ செழித்தாய் இவ்வுலகோர் நெகிழ்ந்தார்
நயமெல்லாம் மிகக் கொண்ட நாடகமாய் எழுந்தாய்
நாட்டினரும் உலகினரும் நாடி நிதம் உயர்ந்தார்.

அகப்பொருளாய் புறப்பொருளாய் அரும் பொருளாய் வாழ்க
அகத்தியனால் காப்பியனால் வளர்ந்தனை நீ வாழ்க
மிகப்பலவாய் இகப்புகழாய் விளங்கிடுவாய் வாழ்க
மென்மொழியே செந்தமிழே என்னுயிரே வாழ்க.

பாட்டாக முன் நடந்தாய் உலகநிலை கண்டாய்
பாரினிலே உரைநடையாம் புதுநடையும் கொண்டாய்
காட்டாறு போல் நீயோ காலமெல்லாம் விரைந்தாய்
கட்டழகு குன்றாத மேனியினாய் வாழ்க.

கவிதை எனப் புலவோர்கள் உனை வியந்து நிற்பார்
கதை யென்றும் நாவலென்றும் பலர் கூடி நயப்பார்
புவிபோற்றும் புகழ் படைத்தாய் பூங்கொடியே வாழ்க
புது மொழியே மதுமொழியே பழமொழியே வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

009948

# முன்னுரை

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தனிப்பட்டவர் களும் பல இலக்கிய நிறுவனங்களும் பங்களிப்புச் செய் துள்ளன. இதில் தெல்லிப்பழைக் கலை இலக்கிய களமும் கடந்த முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளது.

நூல் வெளியீடுகள், கருத்தரங்குகள், நாடக, கவிதை, சிறுகதைப் பட்டறைகள், பாராட்டு விழாக்கள், இலக்கியப் போட்டிகள், பரிசளிப்புக்கள், கல்வி வளர்ச்சி உதவிகள் முதலாக 1986-04-05 தொடக்கம் இற்றைவரை நூறு ஒன்று கூடல்கள் நடந்துள்ளன. 53 நூல்கள் பதிப்பித்து வெளியிடப் பட்டுள்ளன.

ஈழப்போர் காரணமாக பல இடப்பெயர்வுகள் ஏற்பட்ட போதும் ஆங்காங்கு தொடர்ச்சியாக இலக்கியப் பணிகள் நடந்துள்ளன.

எந்த ஒரு நிறுவனமானாலும் அதன் வளர்ச்சிக்கு வரலாற்றுப் பதிவுகள் இன்றியமையாதன. இந்த வகையில் தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் வெள்ளி விழாவில் “கலை இலக்கியக் களமும் கடந்த காலமும்” எனும் கையேடு ஒன்று வெளியிடப்பெற்றது. இப்போது நூறாவது ஒன்றுகூடலின் போது அது பூரணமாக்கப்பட்டு எப்போது, எங்கே, என்ன நிகழ்வு நடந்தது எனும் விபரங்களுடன் இந்நூல் வெளி வருகின்றது.

இந்நூல் கடந்தகால நிகழ்வுகளைப் பதிவு செய்வதுடன் எதிர்காலப் பணிகளுக்கு உரமாகவும் வழிகாட்டியாகவும் பயன் படும் எனக் கருதலாம்.

இவ்வேளை, இந்த இலக்கியக் களத்தைத் தொடக்கி வைத்தவர்களில் அமரத்துவமடைந்தவர்களை நினைவு கூர்ந்து, ஏனையோர்க்கு நன்றி கூறிப் புதியவர்களை வரவேற் கின்றோம்.

**சைவப்புலவர் சு. செல்லத்துரை**
தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியக் களம், தெல்லிப்பழை
## அமைப்பு விதிகள்

(பதிவு இல: HA/8/TA/9/141-21-12-2009)

1. பெயர் : கலை இலக்கியக் களம், தெல்லிப்பழை
2. விலாசம் : இணைச்செயலாளர் ஒருவரின் விலாசம் இதன் விலாசமாய் இருக்கும்.
3. நோக்கம் :
    1. கலை இலக்கியத்துறைகளில் உயர்தர இரசனையைப் பேணுதல்.
    2. தமிழ்மொழி, இலக்கியம் என்பவற்றின் ஆக்கத்திற்காக உழைத்தல்.
    3. தமிழ் மக்களின் சமூக நலன்களைப் பேணிக் காத்தலும் ஏனைய தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயற் படலும்.
    4. கள உறுப்பினர்களின் இலக்கியப் பணி மற்றும் பொதுநலன் சார்ந்த விடயங்களில் அவர்களின் செயற்பாடுகளுக்கு உதவு தல்.
    5. நூல் வெளியீடுகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், மாநாடுகள், விழாக்கள், ஆய்வரங்குகளை நடாத்து தல்.
    6. தகுதி வாய்ந்த கலை இலக்கியவாதி களைக் கௌரவித்தலும், புதிய தலை முறைக் கலை இலக்கியக்காரரை வளர்த் தெடுத்தலும்.
    7. இலக்கியப் போட்டிகள், தேர்வுகளை நடாத்திப் பரிசுகளை வழங்கி ஊக்கு வித்தல்.

3. உறுப்புரிமை : வலிகாமத்தைச் சேர்ந்த கலை இலக்கிய வாதிகள் பன்னிருவர் மத்திய குழுவின் நிரந்தர உறுப்பினர்களாக இருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களில் யாராவது தாமாக விலகினால் அல்லது மறைந்தால் அல்லது நிரந்தரமாக நாட்டைவிட்டுச் சென்றால் அவ்விடத்திற்கு மத்திய குழுவினால் பொது அங்கத்தவர் களில் பொருத்தமானவர்கள் நியமிக்கப் படுவர். மத்திய குழுவின் விதந்துரைத் தலின்படி சாதாரண அங்கத்தவர் சேர்த்துக் கொள்ளப்படுவர். மத்திய உறுப்பினர் ஒருவர் ஆயுட் சந்தாவாக ரூபா ஆயிரம் (1000) செலுத்த வேண்டும். சாதாரண அங்கத்தவர் ஒரு வருட சந்தாவாக ரூபா நூறு (100) அல்லது ஆயுட் சந்தாவாக ரூபா ஆயிரம் (1000) செலுத்த வேண்டும்.

4. முகாமை:
- ❖ மத்திய குழு உறுப்பினர்களில் இருந்து
- ❖ தலைவர் ஒருவர்
- ❖ உப தலைவர் ஒருவர்
- ❖ இணைச்செயலாளர் இருவர்
- ❖ பொருளாளர் ஒருவர் தெரிவு செய்யப் படுவர்.

போசகர்களாகக் கலை இலக்கியத்துறை சார்ந்த மூவர் மத்திய குழுவினால் தெரிவு செய்யப்படுவர்.

மத்திய குழுவில் இருந்து பின்வரும் துறை களுக்கான தலைவர் ஒவ்வொருவரும் தெரிவு செய்யப்படுவர். அத்துறை சார்ந்த நிகழ்வு களுக்கு அவரே வழி காட்டுவார்.

1. இயற்றமிழ்த்துறை
2. இசைத்தமிழ்த்துறை
3. நாடகத் தமிழ்த்துறை

5. கூட்டங்களும் முடிவெடுத்தலும்:

1. மத்திய குழுக்கூட்டம் மூன்று மாதத் திற்கொரு முறை நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. விசேட தேவைக்கெனத் தலைவர் அல்லது இணைச்செயலர் கூட்டத்தைக் கூட்டலாம்.
3. அவசிய விடயங்களைத் தலைவரும் இணைச் செயலரும் பொருளாளரும் இணைந்து கலந்து பேசித் தீர்மானிப்பர்.
4. எல்லா முடிவுகளையும் மத்திய குழுவே எடுக்கும்.
5. உப குழுக்களின் செயற்திட்டங்களும் மத்திய குழுவின் அங்கீகாரத்துடனேயே நடைபெறும்.
6. வருடாந்தம் தை மாதத்தில் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும்.

6. உத்தியோகத்தர் கடமைகள்:

தலைவர் : கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல், செயற்பாடுகள் அனைத்தையும் நிர்வகித்தல்.

இணைச்செயலர்: அங்கத்தவர்களுக்கு இலக்கம் வழங்கி அங்கத்தவர் இடாப்பைப் பேணுதல், சங்கக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களைச் செயற்படுத்துதல்.

உபதலைவர்: தலைவர் இல்லாத வேளைகளில் தலைவரின் கடமைகளைப் பொறுப் பேற்றல்.

பொருளாளர்: நிதி நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருத்தல், வங்கிக் கணக்கையும் நிதி தொடர்பான ஏடுகளையும் பேணிப் பாதுகாத்தல், கூட்டங்களில் நிதி அறிக்கை சமர்ப்பித்தல்.

இயற்றமிழ்த்துறைத் தலைவர்:

களம் நடத்தும் இயற்றமிழ் சார்ந்த விடயங்களுக்கு இணைப்பாளராக இருந்து பொறுப் பேற்றுச் செயற்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத் தமிழ்த்துறைத் தலைவர்:
நாடகத் தமிழ் தொடர்பான செயற்பாடுகளுக்கு இணைப்பாளராக இருந்து பொறுப் பேற்றுச் செயற்படல்.

இசைத் தமிழ்த்துறைத் தலைவர்:
இசைத்தமிழ் தொடர்பான செயற்பாடு களுக்கு இணைப்பாளராக இருந்து பொறுப்பேற்றுச் செயற்படல்.

மத்திய குழு உறுப்பினர்:
களத்தின் செயற்பாடு அனைத்திலும் ஒத்துப் பணி செய்தல்.

7. நிதி நிர்வாகம்: களத்தின் நிதி வங்கி ஒன்றில் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்படும். பொருளாளருடன் தலை வர் அல்லது இணைச் செயலாளரில் ஒருவர் கணக்கை நிர்வகிக்கலாம்.

8. நிதியாண்டு: வருடந்தோறும் தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 31ம் திகதி வரை யான காலம் நிதி யாண்டாகக் கொள்ளப்படும். வங்கிக் கணக்கு வெள்ளவத்தை தேசிய சேமிப்பு வங்கி 1-0070-03-99361



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை இலக்கியக் களம், தெல்லிப்பழை

இப்பொழுது இயங்கும் மத்தியகுழு உறுப்பினர்கள்

போசகர்கள்:- பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள்,
பேராசிரியர் நா.சண்முகலிங்கன் அவர்கள் (முன்னாள் உபவேந்தர், யாழ் பல்கலைக் கழகம்)
திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள் (செயலாளர், மீள் குடியேற்ற ராஜாங்க அமைச்சு)

தலைவர்:- கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள்

உபதலைவர்:- பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன் அவர்கள்

இணைச்செயலாளர்:-
கலாபூஷணம் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள்
திருமதி. இராஜி கெங்காதரன் அவர்கள்

பொருளாளர்:- திரு. எஸ்.யு.சந்திரகுமாரன் அவர்கள்
பிரதிப்பிரதம செயலர் (நிதி), வடமாகாண சபை

தலைவர் இயற்றமிழ்க் குழு:-
திரு. ம. பா. மகாலிங்கசிவம் அவர்கள்

தலைவர் இசைத்தமிழ்க் குழு:-
திருமதி. நேசபூபதி நாகராஜன் அவர்கள்

தலைவர் நாடகக் குழு:-
திரு. சி.சிவராஜன் அவர்கள்

மத்தியகுழு உறுப்பினர்கள்:-
திரு. கி. மகேந்திரராஜா அவர்கள்
திருமதி. த.சிதம்பரநாதன் அவர்கள்
திருமதி. ப.கணேசதுரை அவர்கள்
திருமதி. மாலா மதிவதனன் அவர்கள்
திரு. ச.கிருபானந்தன் அவர்கள்

இடைக்காலத்தில் மத்திய குழு உறுப்பினராக இருந்தோர்:-
திரு. சி.சிவமகாராசா அவர்கள்
திரு. கோ. சி. வேலாயுதம் அவர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களத்தின் ஆரம்ப நிகழ்வு ஒன்றில் திரு. செ. சிவசுப்பிரமணியம் உரையாற்று கிறார். கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை மேடையில் உள்ளார். (1986)

Director
Lebama Library
Educational Resource Centre
87,Kanamambigaikulam
Kilinochchi.



களத்தின் ஆரம்ப நிகழ்வு ஒன்றில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் களத்தின் முன்னாள் பொருளாளர் சைவப்புலவர் அநு. வை. நாகராஜன் அவர்கள் உரை யாற்றுகிறார். (1987)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களத்தின் ஆரம்ப நிகழ்வு ஒன்றில் நூலின் சிறப்புப் பிரதிகளை வழங்கும் முன்னைநாள் காப்பாளர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் (1986)



களத்தின் ஆரம்பகால நிகழ்வு ஒன்றில் எமது முன்னைநாள் காப்பாளர் திரு. பொ. சிவஞானசுந்தரம் அவர்களிடமிருந்து இயற்குழுத் தலைவர் குறமகள் அவர்கள் சிறப்புப்பிரதி பெறுகிறார் (1986)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05.04.1988இல் உருவான ஆரம்பகால கலை இலக்கியக் களத்தின் மத்திய குழு

காப்பாளர்கள்:- 1. துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

2. பேராசிரியர் திரு. சு. வித்தியானந்தன் அவர்கள்

3. திரு. பொ. சிவஞானசுந்தரம் அவர்கள் (முன்னாள் வட்டாரக் கல்வி அதிகாரி)

தலைவர்:- கலாநிதி திரு. நா.சுப்பிரமணியன் அவர்கள்

இணைச்செயலாளர்:-

திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள்

கலைப்பேரரசு திரு. ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள் (தலைவர், நாடகக்குழு)

நிதியாளர்:- திரு. அநு.வை.நாகராஜன் அவர்கள்

தலைவர் இயற்குழு:-

திருமதி. வ.இராமலிங்கம் அவர்கள்

தலைவர் இசைக்குழு:-

திருமதி. த.சிதம்பரநாதன் அவர்கள்

தலைவர் சிற்ப ஓவியக்குழு:-

கலாகேசரி திரு. ஆ.தம்பித்துரை அவர்கள்

செயற்குழு உறுப்பினர்கள்:-

பண்டிதர் திரு. சி.அப்புத்துரை அவர்கள்

சைவப்புலவர் திரு. சு.செல்லத்துரை அவர்கள்

திரு. க.பாலசுந்தரம் அவர்கள்

திரு. கி.மகேந்திரராஜா அவர்கள்

திருமதி. கௌ.சுப்பிரமணியன் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியக் களமும் கடந்த காலமும்.....

## அமைப்பு உருவாக்கம் 05.04.1986

ஆரம்பக்கூட்டம் :

ஆரம்பக் கலந்துரையாடல்களின் பின் அக்கறை கொண்ட கலைஞர்கள், இலக்கியக்காரர்கள் 05-09-1986இல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் கூடினோம். “கலை இலக்கியக் களம், தெல்லிப்பழை” என அமைப்புக்குப் பெயர் வைத்துக் கொண்டோம்.

காப்பாளர்கள், அவர்களின் ஒப்புதலோடு நியமிக்கப் பட்டனர். மத்தியகுழு தெரிவு செய்யப்பட்டது. மத்திய குழுவினர் ஒவ்வொருவரும் ரூபா இருபத்தைந்து அங்கத்துவப் பணமாகச் செலுத்தினோம். வலி வடக்கைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்கள் பலர் சாதாரண அங்கத்தவர்களாக இருந்தனர். அவர்கள் ரூபா பத்தை அங்கத்துவப் பணமாகச் செலுத்தினர். ஏறத்தாழ ஆயிரம் ரூபா கையிருப்புடன் பணிகளை ஆரம்பித்தோம்.

17.09.1986 - முதலாவது ஒன்றுகூடல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில்.

மதுரகான நாதஸ்வரமணி சோ. செ. சிதம்பரநாதன் குழு வினர் மங்கள இசை வழங்கினர்.

“இசையும் நானும்” என்ற தலைப்பில் திரு. சோ. செ. சிதம்பரநாதனையும் “பெண்நிலை வாதமும் இலக்கியமும்” என்ற தலைப்பில் திருமதி. சித்திரலேகா மௌனகுருவையும் “இன்றைய நாடக அரங்கு” என்ற பொருளில் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களையும் செவ்வி கண்டோம்.

25.10.1986 - இரண்டாவது மாலை - யூனியன் கல்லூரி மண்டபம்.

சங்கீத பூஷணம் எல்.திலகநாயகம் போல் அவர்களின் இன்னிசையில் மகிழ்ந்து அவரைச் செவ்வியும் கண்டோம். அப்போதைய எமது காப்பாளர்கள் பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தன், துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக் குட்டி ஆகியோரின் விசேட உரைகளைக் கேட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பில் நடைபெற்ற கலை இலக்கியக்கள நிகழ்வில் பேராசிரியர். எழுத்தாளர் நந்தி அவர்களிடமிருந்து எழுத்தாளர் திரு. சு. இராஜநாயகன் சிறப்புப் பிரதி பெறுகிறார் (1997)



கொழும்பில் நடைபெற்ற களத்தின் நிகழ்வு ஒன்றில் எமது முன்னாள் இயற்றமிழ்க் குழுத்தலைவர் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்கள் கலந்து கொண்டிருக்கிறார். இலக்கணவித்தகர் பண்டிதர் இ. நமசிவாயதேசிகர். திருமதி கமலினி செல்வராஜன், பண்டிதர் க. உமாமகேஸ்வரன் ஆகியோரும் காணப்படுகின்றனர். மூத்த எழுத் தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்கள் உரையாற்றுகிறார். (1997)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மருதனார்மடத்தில் இயங்கிய யூனியன் கல்லூரி மண்டபத்தில் களத்தின் முன்னைநாள் இணைச்செயலாளர் கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை அவர்கள் உரை நிகழ்த்துகிறார். (1988)



களத்தின் "சிறுகதை நாள்" நிகழ்வில் உரையாற்றும் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் (1988)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08.11.1986 - மூன்றாவது நிகழ்வு - யூனியன் கல்லூரி மண்டபம் புதிய ஆக்கங்கள் அறிமுகம்.

"பண்மகள்" சஞ்சிகையைச் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களும் "89 ஒக்டோபர் சிறுகதை"களைத் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களும் "வெறியாட்டு", "தியாகத் திருமணம்", "தர்மயுத்தம்" ஆகிய நாடகங்களைக் கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களும் அறிமுகம் செய்தனர்.

30.11.1986 - நாலாவது நிகழ்வு - கலை விருந்து - யூனியன் கல்லூரி.

செல்வி அபிராமி புவனேந்திரனின் நடனத்தையும், செல்வி ஏ. வசந்தரூபி, செல்வன் பா. பாலநந்தகுமார், திரு. எஸ்.உருத்திரேஸ்வரன், திரு. இ.சிவானந்தன், திரு. ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோரின் தனி நடிப்புகளையும் தந்தோம்.

Director Library Resource Centre ...gaikulam ...chchi.

03.12.1986 - ஐந்தாவது நிகழ்வு - சிறுகதைக் கருத்தரங்கு - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

கலாநிதி நா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் 'நந்தி' அவர்களின் சிறுகதை ஒன்றைத் திரு. அநு. வை. நாகராஜன், திரு. க. பாலசுந்தரம் ஆகியோரும், திரு. க. பாலசுந்தரம் அவர்களின் சிறுகதை ஒன்றைத் திருமதி. கோகிலா மகேந்திரன், திரு. ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோரும் முன்னுதாரணங்காட்டிச் சிறுகதை எழுதல் பற்றிய விளக்கத்தினைக் கல்லூரி மாணவர்களுக்குக் கொடுத்தனர்.

17.01.1987 - ஆறாவது நிகழ்வு - ஓவிய அரங்கு - யூனியன் கல்லூரி மண்டபம்.

கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்கள் தலைமையில் சித்திரக் கண்காட்சி நடைபெற்றது. ஓவியக்கலை பற்றிய சிறந்த கருத்துக்களை ஓய்வுநிலை ஓவிய விரிவுரையாளர் திரு. கே. கனகசபாபதி, திரு. ஆ. இராசையா ஆகியோர் வழங்கினர்.

24.01.1987 - ஏழாவது நிகழ்வு - சிந்தனை மேடை - யூனியன் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு. வித்தியானந்தன் அவர்கள் தலைமை தாங்க, "பல்கலைக்கழக வளர்ச்சியில் தமிழ் மக்களின் பங்களிப்பு" என்ற ஆய்வுக் கட்டுரையைத் திரு. மு.சிவராசா M.A அவர்கள் சமர்ப்பித்தார். பேராசிரியர் வி. சந்திரசேகரம் அவர்கள் சிறப்பு விருந்தினர் உரை தந்தார்.

இந்திய அமைதி காக்கும் படையினர் வருகையால் நாட்டுநிலை மோசமாக மாறியதால், சிறிய இடைவெளியின் பின்,

23.03.1987 - எட்டாவது ஒன்றுகூடல் - மகாஜனக்கல்லூரி வகுப்பறை.

தெல்லிப்பழைச் சந்தி பாதுகாப்பற்ற இடமாக மாறியதால் ஒன்றுகூடல் இடம் மாற்றப்பட்டது. சாஸ்திரிய நடனம் பற்றி இயலிசைவாரிதி ந. வீரமணி ஐயர் அவர்கள் மெல்லிய அசைவுகள், பாவங்களோடு கூடிய செம்மையான கருத்துரைகளை முன்வைத்தார். 'புனைகதை' பற்றி எழுத்தாளர் 'செங்கை ஆழியான்' கருத்துரை வழங்கினார். பங்கு பற்றியோர் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது.

அமைதி முற்றாகவே கெட்டுப்போன நிலையில் அடுத்த சந்திப்புக்கு ஐந்து மாதங்கள் காத்திருந்தோம்.

01.08.1987 - ஒன்பதாவது நூல் அறிமுக நிகழ்வு - யூனியன் கல்லூரி.

சங்கீத பூஷணம் திருமதி. த.சிதம்பரநாதன் அவர்களின் தலைமையில் "ஏழு நாடகங்கள்" என்ற நூல் அறிமுக மாயிற்று. திருமதி. கோகிலா மகேந்திரன், குழந்தை ம. சண்முகலிங்கம், கலாநிதி சி. மௌனகுரு ஆகியோர் நூல் நல்ல முறையில் அறிமுகமாக உதவினர்.

யுத்த அனர்த்தம் ஒன்றின் கோரப்பிடிக்குள் எல்லோரும் சிக்கிப் பலரை இழந்து உயிரோடு இருந்தவர்கள். மீண்டும் சந்திக்க எட்டு ஒன்பது மாதங்கள் எடுத்தன.

02.04.1988 - பத்தாவது நிகழ்வு - இலக்கிய அமர்வு - யூனியன் கல்லூரி.

'குறமகள்' அவர்களைச் செவ்வி கண்டோம். அண்மைக் காலச் சிறுகதைகள் பற்றித் திரு. ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களின் கருத்தினைக் கேட்டோம். மாணவியர் சிலரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி நடிப்புகளை இரசித்தோம்.

30.04.1988 - பதினொராவது நிகழ்வு - மணிவிழா - யூனியன் கல்லூரி.
கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களுக்கு மணிவிழா எடுத்தோம். கம்பன்கழகம் இ. ஜெயராஜ், செம்பியன் செல்வன், கலாநிதி சி. மௌனகுரு, குறமகள், குழந்தை ம. சண்முகலிங்கம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். களத்தின் நாடகவியல் மாணவர்களை ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள் மாலை அணிவித்துக் கௌரவித்தார்.

18.05.1988 - பன்னிரண்டாவது நிகழ்வு - காத்திரமான சிந்தனை மேடை - யூனியன் கல்லூரி.

"சேர். பொன். இராமநாதனின் கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும்" என்ற தலைப்பில் திரு. ஆர்.எஸ்.நடராஜா SLEAS அவர்கள் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார். சிறப்பு விருந்தினர் உரையைத் திரு. வ.ஆறுமுகம் M.Phil அவர்கள் வழங்கினார்.

15.06.1988 - பதின்மூன்றாவது நிகழ்வு - தளிர்க்கூடல் - யூனியன் கல்லூரி.

களத்தின் தளிர்களை (இளம் அங்கத்தவர்கள்) ஒன்றுகூட வைத்து அவர்களின் தனிநடிப்பு, ஆடல், பாடல், ஆற்றல்கள் வளர உற்சாகமூட்டினோம்.

29.06.1988 - பதின்னான்காவது இசைநிகழ்வு - யூனியன் கல்லூரி.

சங்கீத பூஷணம் எஸ். பத்மலிங்கம் அவர்களின் இசையரு வியில் மூழ்கினோம். அவரது அரிய கருத்துரைகளையும் கேட்டறிந்தோம்.

17.07.1988 - பதினைந்தாவது பயனுள்ள ஒன்றுகூடல் - யூனியன் கல்லூரி.

இது சிறுகதை நாள். கலாநிதி நா.சுப்பிரமணியன் தலைமை ஏற்றார். நாலு அரங்குகள் அமைந்தன. அரங்கு ஒன்றுக்குப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமை தாங்க, "தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக் கட்டங்கள்" பற்றிக் கருணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகனும் "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையின் வரலாறும் வளர்ச்சியும்" பற்றி அ. ரவியும் உரையாற்றினர். டாக்டர் எம். கே. முருகானந்தன் கலந்துரையாடலைத் தொடக்கி வைத்தார். அரங்கு இரண்டுக்குக் குறமகள் தலைமை தாங்க, "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் முற்போக்குச் சிந்தனை" பற்றிய சொக்கனின் கட்டுரை வாசிக்கப்பட்டது. "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளும் தேசிய இனப்பிரச்சி னையும்" பற்றி அ.யேசுராசா உரையாற்றினார். மயிலங்கூடலூர் பி. நடராசன் தொடக்கி வைத்தார். அரங்கு மூன்றுக்கு வரதர் அவர்கள் தலைவராக, "யாம் சுவைத்த பிறமொழிச் சிறுகதைகள்" பற்றிக் கவிஞர் சோ.ப. அவர்களும், பண்டிதர் க. உமாமகேஸ்வரன் அவர்களும் உரை நிகழ்த்தினர். க. சட்டநாதன் கலந்துரையாடலை ஆரம்பித்தார். அரங்கு நாலுக்குத் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள் தலைமை தாங்க, "நெல்லை க.பேரன், திரு. நா.சோமகாந்தன்" ஆகிய எழுத்தாளர்களை மாணவிகள் நாடகபாணியில் பேட்டி கண்டு கருத்துக்களை அறிந்ததோடு அவர்களின் சில பாத்திரங்களுக்கு அரங்க வடிவமும் கொடுத்தனர். பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் சிறப்புத் தொகுப்புரை ஆற்றினார். நண்பகல் விருந்தும் நலமாய் நடந்தது.

21.08.1988 - பதினாறாவது நிகழ்வு - மணியான விழா - யூனியன் கல்லூரி.

பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களின் மணிவிழாவாக இந்நாள் அமைந்தது. திரு. அநு. வை. நாகராஜன் அவர்கள் "ஈழத்துச் சிறுவர் இலக்கியமும் கூடல் நாடனின் பங்களிப்பும்" எனும் பொருளில் ஆய்வுக் கட்டுரை வாசிக்க, "பண்டிதர் அவர்களின் பதிப்புப்பணி" பற்றி மயிலங்கூடலூர் பி. நடராஜன் அவர்கள் உரை நிகழ்த்தினார். கலாநிதி இ.பாலசுந்தரம் எழுதிய "இடப் பெயர்வு ஆய்வு - காங்கேயன் கல்வி வட்டாரம்" எனும் நூல் வெளியிடப் பட்டது. திரு. சி. சிவமகாராஜா அவர்கள் வெளியீட்டுரை செய்ய, பேராசிரியர் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை, பேராசி ரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்தினர்.

23.10.1988 - பதினேழாவது நிகழ்வு - சிந்தனை மேடை - யூனியன் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேதாந்த சைவசித்தாந்த மரபுகளில் முத்திநிலை" பற்றித் திருமதி. கலாதேவி பொன்னம்பலம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். கலாநிதி வி.கோபாலகிருஷ்ணன் அவர்கள் சிறப்பு விருந்தினர் உரை ஆற்றினார்.

22.01.1989 - பதினெட்டாவது குழந்தை இலக்கிய நிகழ்வு - யூனியன் கல்லூரி.

இந்நிகழ்வில் அநு. வை.நாகராஜன் அவர்களின் "காட்டில் ஒரு வாரம்" என்ற சிறுவர் நாவல் அறிமுகமானது. திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமான நிகழ்வுக்கு "குறமகள்" தலைமை ஏற்றார். செல்வி. எஸ்.ஜெயரஞ்சினி, செல்வன் பா.மகாலிங்கசிவம் ஆகியோர் மாணவர் நிலையில் நூலைத் திறனாய்வு செய்தனர். "இலங்கையின் சிறுவர் இலக்கியப் பாரம் பரியத்தில் காட்டில் ஒரு வாரம்" என்ற தலைப்பில் பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கள் பேசினார். பண்டிதர் க. உமாமகேஸ்வரன் அவர்களும் நூலைத் திறனாய்வு செய்தார்.

...ry
...Centre
...kulam
...lli.

04.02.1989 - பத்தொன்பதாவது அஞ்சலி நிகழ்வு - தெல்லிப்பழை ப.நோ.கூ.ச மண்டபம்.

துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் காலமாகியதை அடுத்து அவருக்குச் செலுத்தும் அஞ்சலி நிகழ்வாக இது அமைந்தது. இருபது அறிஞர்கள் தமது அஞ்சலி உரைகளைச் சமர்ப்பித்தனர்.

20.02.1989 - இருபதாவது இனிய நிகழ்வு - யூனியன் கல்லூரி மண்டபம்.

திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களின் 'தூவானம் கவனம்' நாவல் வெளியீடாக இது அமைந்தது.

கலாநிதி நா. சுப்பிரமணியன் தலைமையில் வே.சபாநாயகம் பிரதம விருந்தினர் உரை ஆற்றினார். வெளியீட்டுரையைக் குறமகள் செய்தார். 'தூவானம் கவனம்' பற்றிச் சோ. ப. அவர்களும் 'கோகிலாவின் நூல்கள்' பற்றிக் கலாநிதி அ.சண்முகதாஸ் அவர்களும் ஆய்வு செய்தனர். ஓவியர் ஸ்ரீதர் பிச்சையப்பா, அச்சக உரிமையாளர் திரு. சி.நவரத்தினம் ஆகியோர் பற்றிய மதிப்பீட்டைத் திரு. க.உமா மகேஸ்வரன் அவர்கள் வழங்கினார். "கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியக் களமும் கடந்த காலமும்" என்ற தலைப்பில் ஒரு சிறு பிரசுரம் வெளியிடப்பட்டது. 1987, 1988 ஆகிய இரு ஆண்டுகளிலும் வட இ. ச. சபையின் 'நாடகமும் அரங்கியலும்' பரீட்சைக்குக் களத்தின் தளிர்கள் தோற்றிச் சித்தி அடைந்தனர்.

| | | |
|---|---|---|
| பரீட்சைக்குத் தோற்றியோர் | - | 29 பேர் |
| முதல் வகுப்புச் சித்தி | - | 11 பேர் |
| இரண்டாம் வகுப்புச் சித்தி | - | 11 பேர் |
| சாதாரண சித்தி | - | 3 பேர் |

01.04.1989 - இருபத்தோராவது நிகழ்வு - இயல் அரங்கு - தெல்லிப்பழை ப.நோ.கூ.ச மண்டபம்.

நாவண்ணன் எழுதிய "பயணம் தொடர்கிறது" நாவல் அறிமுக விழாவுக்குக் குறமகள் அவர்கள் தலைமை தாங்கினார். சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் நூலை அறிமுகம் செய்ய, திருமதி. கோகிலா மகேந்திரன், திரு. எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் நூலை ஆய்வு செய்தனர்.

29.04.1989 - இருபத்திரண்டாவது அறிமுக நிகழ்வு - கொழும்பு

திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களின் "தூவானம் கவனம்" நாவல் அறிமுக விழா கொழும்பு-11 இல் அமைந்த இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணி மண்டபத்தில் திரு. தெளிவத்தை ஜோசப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கலை இலக்கியக் களத்தின் செயற்குழு உறுப்பினர் பண்டிதர் சி.அப்புத்துரை, மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா ஆகியோர் ஆசியுரை வழங்கினர். கவிஞர் மேமன் கவி அவர்கள் நூல் அறிமுக உரை செய்தார். திருமதி. யோகா பாலச்சந்திரன், திரு. கே.எஸ்.சிவகுமாரன், திருமதி. அன்னலட்சுமி இராசதுரை, திருமதி. கமலினி செல்வராஜன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

12.08.1989 - இருபத்து மூன்றாவது அஞ்சலி நிகழ்வு - நடேஸ்வராக் கல்லூரி.

இக்காலப் பகுதியில் காலஞ்சென்ற நடிகமணி வி.வி.வைரமுத்துவுக்கான நினைவுக் கலந்துரையாடலாக இது அமைந்தது. கலாநிதி நா.சுப்பிரமணியன் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையில் குழந்தை ம.சண்முகலிங்கம், காரை. செ.சுந்தரம்பிள்ளை, ஏ.ரி.பொன்னுத்துரை, வி. ரி. செல்வ ராசா, அநு. வை. நாகராஜன், திருமதி. கோகிலா மகேந்திரன், சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோர் நினைவுரைகளை ஆற்றினர்.

13.10.1989, 14.10.1989 - இருபத்து நான்காவது காத்திரமான ஆய்வு நிகழ்வு - யூனியன் கல்லூரி

கலாநிதி நா.சுப்பிரமணியன் தலைமையில் இருநாள் நிகழ்வாக அமைந்த இந்த ஒன்றுகூடலில் 1987-88 இல் ஈழத்தில் வெளிவந்த தமிழ் நூல்கள் ஆய்வு செய்யப் பட்டன.

முதலாவது அமர்வுக்குக் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அவர்கள் தலைமை தாங்க 'சிறுவர் இலக்கியம்' பற்றித் திருமதி பால ராணி சண்முகராஜாவும், 'காவியம்' பற்றித் திரு. இ. முருகையனும், 'தனிமனித வரலாறு' பற்றிச் சொக்கனும், 'கலை ஆய்வுகள்' பற்றிக் கலாநிதி சோ.கிருஷ்ணராஜாவும், 'இசை' பற்றித் திருமதி. த.சிதம்பரநாதனும் ஆய்வு செய்தனர்.

இரண்டாவது அமர்வுக்குப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைவராக 'இலக்கிய ஆய்வுகள்' பற்றி வித்துவான் சி.குமாரசாமியும் 'வரலாற்று ஆய்வுகள்' பற்றித் திரு. ப.புஷ்பரத்தினமும், திரு. செ.கிருஷ்ணராசாவும் 'நாடகம்' பற்றித் திருமதி. கௌ. சுப்பிரமணியனும், 'கவிதை' பற்றித் திரு. சோ.பவும் 'கல்வியியல்' பற்றித் திரு. க. இராஜ துரையும் ஆய்வு செய்தனர்.

மூன்றாவது அமர்வுக்குச் 'சிற்பி' அவர்கள் தலைமை தாங்க சிறுகதை பற்றித் திரு. சு.இராஜநாயகன் அவர்களும், நாவல் பற்றிக் குறமகள் அவர்களும் சமயம் பற்றிச் சைவப்புலவர் சு.செல்லத்துரை, பண்டிதர் சி.அப்புத்துரை ஆகியோரும், பல்துறை பற்றி அநு. வை. நாகராஜன் அவர்களும் நூற்கட்டமைப்புப் பற்றிக் கல்வயல் செ.குமாரசுவாமி அவர்களும் ஆய்வு செய்தனர். ஒவ்வொரு அமர்வு பற்றியும் அவையோர் குறிப்புரை வழங்கினர். இரண்டு நாள் நிகழ்வின் அறுவடை பற்றி இறுதியில் ஒரு கலந்துரையாடல் இடம் பெற்றது. அதனைக் கலாநிதி நா. சுப்பிரமணியன், கலாநிதி சபா. ஜெயராசா, திரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி. நடராசன், திரு. மு. பொன்னம்பலம், திரு. டொமினிக் ஜீவா, திரு. த. கலாமணி ஆகியோர் வளம்படுத்தினர். ஆய்வுக் கையேடுகள் அனைவருக்கும் வழங்கப்பட்டன.

14.01.1990 - இருபத்தைந்தாவது நிகழ்வு - தைப்பொங்கல் விழா - மகாஜனக்கல்லூரி மண்டபம்.

'நெஞ்சுக்கு நெருக்கமாய் உங்களுடன்' என்ற இந்நிகழ்வு தைப் பொங்கல் நாள் மாலையில் மகாஜனக் கல்லூரியின் துரையப்பா மண்டபத்தில் நிகழ்ந்தது. திருமதி கோகிலா மகேந்திரனின் எழுத்துரு, நெறியாள்கையில், மகாஜன மாணவர்கள் நடித்த "வான் விளிம்பில் ஓர் நட்சத்திரம்" குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் "மாதொரு பாகம்" ஆகிய இரு நாடகங்களைப் பார்த்து அவை பற்றி உரையாடினோம். பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துரைத்தார்.

21.01.1990 - இருபத்தாறாவது நிகழ்வு - நினைவுநாள் - யூனியன் கல்லூரி மண்டபம்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் நினைவு நாளாக இது அமைந்தது. பேராசிரியரின் "நாடகம், நாட்டாரியற் சிந்தனைகள்" என்ற நூலை வெளியிட்டு வைத்துப் பேராசிரியர் ந.பாலகிருஷ்ணன் அவர்கள் உரையாற்றினார். பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் நூலை ஆய்வு செய்தார். பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் நினைவுதினச் சிறப்புரையை ஆற்றினார்.

10.02.1990 - இருபத்தேழாவது இயல் நிகழ்வு - யூனியன் கல்லூரி.

இலக்கண வித்தகர் பண்டிதர் இ.நமசிவாயம் அவர்களைச் சந்தித்து அவரது கட்டுரைகளைப் படித்து அவரது அநுபவங்களைக் கலந்துரையாடிப் பயன் பெற்றோம்.

17.03.1990 - இருபத்தெட்டாவது நிகழ்வு - நாடக ஒன்று கூடல் - யூனியன் கல்லூரி.

வெளிநாடுகளில் இருந்து பல புதிய நாடக அனுபவங்களைப் பெற்றுத் திரும்பியிருந்த திரு. க.சிதம்பர நாதன் அவர்களைத் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களின் தலைமையில் தரிசித்துக் கலந்துரையாடிப் பல தகவல்களைப் பெற்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17.04.1990 - இருபத்தொன்பதாவது இயல் நிகழ்வு - யூனியன் கல்லூரி.

'குறமகள் கதைகள்' என்ற நூலை அறிமுகம் செய்தோம். திருமதி. கோகிலா மகேந்திரன் நூலை அறிமுகம் செய்ய திருமதி. சித்திரலேகா மௌனகுரு, திரு. பி.நடராஜன் ஆகியோர் நூலை ஆய்வு செய்தனர்.

20.05.1990 - முப்பதாவது நிகழ்வு - சங்கநாதம் - யூனியன் கல்லூரி.

தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தின் தளிர்கள் சேர்ந்து 'சங்கநாதம்' என்ற இளையோர் அமைப்பை உருவாக்கினர். சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் மூத்த புதல்வன் செ.நாவரசன் தலைமையில் களத் தலைவரின் ஆசியுரையுடன் நிகழ்வு ஆரம்பமானது. "செப்பலுற்ற பொருளின் சிறப்பு" என்ற தலைப்பில் திரு. ச.விநாயகமூர்த்தி அவர்களும், "சொற்பொழிவுக் கலை" என்ற பொருளில் திரு. க.உமாமகேஸ்வரன் அவர்களும் உரையாற்றினர். சங்கநாத அங்கத்தவர்களாகிய பயிலுநர் உரைகளும் இடம்பெற்றன. நிகழ்வு பற்றிய கருத்துரைக ளைத் திரு. சோ. ப., திரு. அநு. வை.நாகராஜன், திருமதி. கோகிலா மகேந்திரன் ஆகியோர் கூறினர்.

1990ம் ஆண்டு நடைபெற்ற வட இலங்கைச் சங்கீத சபையின் நாடகமும் அரங்கியலும் பரீட்சையில் களத்தில் இருந்து தோற்றிய திருமதி. கௌசலா சுப்பிரமணியன் ஆசிரியர் தரம் சித்தி எய்தினார். நாடகமும் அரங்கியலும் என்ற துறையில் ஆசிரியர் தரத்தில் சித்தி எய்திய முதலாவது பரீட்சார்த்தி என்ற பெருமையைக் களத்திற்குப் பெற்றுத் தந்தார்.

16.03.1991, 17.03.1991 முப்பத்தோராவது நிகழ்வு - கவிதை நாள் - அளவெட்டி அருணோதயக் கல்லூரி.

வலிகாமம் வடக்கின் பாரிய இடப்பெயர்வுகள், ஷெல் வீச்சுக்கள் காரணமாக நீண்ட இடைவெளி அமைந்தது. யூனியன் கல்லூரியில் நிகழ்வுகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. மத்திய குழுவினர், அங்கத்தவர் யாவரும் இடம் பெயர்ந்த அனர்த்த நிலையில் இருநாள் கவிதைப் பட்டறை நிகழ்வு அளவெட்டியில் நடைபெற்றது. மத்திய குழு உறுப்பினர் திரு. கி.மகேந்திரராஜா அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணோதயக் கல்லூரியில் பணியாற்றியபடியால் அந்தப் பாடசாலை ஒத்துழைத்தது. சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமை தாங்கினார். "கவிதை என்றால் என்ன?" என்பது பற்றிப் பண்டிதர் க.சச்சிதானந்தன் அருமையான விளக்கம் தர, காரை. செ.சுந்தரம்பிள்ளை, கல்வயல் வே.குமாரசாமி, புலவர். ம.பார்வதிநாதசிவம் ஆகியோர் தமது கவித்துவ அநுபவங்களை விளக்க, மரபுக் கவிதை ஆக்கம் பற்றிப் பண்டிதர் க. உமாமகேஸ்வரன் விளக்கினார். மாணவர்கள் கவிதை ஆக்கினர். "புதியதோர் உலகம் செய்வோம்" என்ற தலைப்பிலான கவி அரங்கில் புலவர் ம. பார்வதிநாதசிவம் தலைமையில் மாணவர் உற்சாகத்துடன் பங்கேற்றனர். பட்டறை மாணவர் சிறந்த கவிதைகளை நயந்து தனி நடிப்பாக்கினர். கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள் விமர்சனக் குறிப்புகள் கூறினார்.

30.03.1991 - முப்பத்திரண்டாவது பாராட்டு நிகழ்வு - தாவடி. களத்தின் பொருளாளர் அநு. வை. நாகராஜன் அவர்கள் இடம் பெயர்ந்து தங்கியிருந்த தாவடி வீட்டில் இந்நிகழ்வு நடைபெற்றது. கவிஞர் சோ.ப அவர்கள் நோர்வேத் தமிழ்ச் சங்கப் பரிசு பெற்றமையைப் பாராட்டித் தேநீர் விருந்து கொடுத்துக் கௌரவித்தோம்.

05.04.1991 - முப்பத்து மூன்றாவது ஒன்றுகூடல் - தாவடி.
எமது காப்பாளர்களில் ஒருவரான சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்குக் 'கலாசூரி' விருது கிடைத்தமைக்காக அவரை அழைத்துப் பாராட்டித் தேநீர் விருந்தளித்து எமது மகிழ்வைத் தெரிவித்தோம்.

07.07.1991 - முப்பத்து நான்காவது இசை நாடக நிகழ்வு - தாவடி இ. த.க. பாடசாலை.

எமது பொருளாளர் அநு. வை. நாகராஜன் அவர்கள் தாவடி இ.த.க. பாடசாலை அதிபராக அமைந்தமையால் அவரது ஒத்துழைப்புடன் நிகழ்வை அங்கு நடத்தினோம். செவ்வியும் செயன் முறையுமாக அமைந்த இந்த நிகழ்வில் அரங்கியல் அநுபவங்களைப் பெற்றோம். சைவப்புலவர் சு.செல்லத் துரை அவர்கள் தலைமை தாங்கக் கலைப்பேரரசு நிகழ்வை நெறிப்படுத்தினார். இசை நாடகக் கலைஞர்கள் வி. என். செல்வராசா, பி. கனகரத்தினம், வி.செல்வரத்தினம் ஆகியோர் தமது இசை நாடகப் பாத்திரங்களைச் செயன் முறையுடன் விளக்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20.07.1991 - முப்பத்து ஐந்தாவது அஞ்சலி நிகழ்வு - தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி.

இக்காலப் பகுதியில் மறைந்துவிட்ட கவிஞர், நாடக அறிஞர், செ.கதிரேசர்பிள்ளை அவர்களின் நினைவு நாளாக இது அமைந்தது. இக்காலத்தில் அளவெட்டி ஊடாக மகாஜனக் கல்லூரி வரை செல்லக்கூடிய நிலை இருந்ததால் நிகழ்வு மகாஜனாவில் நடந்தது. கலாநிதி நா.சுப்பிரமணியன் தலைமையில் சிவத்தமிழ்ச் செல்வி, திரு. க.நாகேஸ்வரன், திரு. நா. சண்முகலிங்கன், திருமதி. கோகிலா மகேந்திரன் ஆகிய பலர் அவரது நற் பண்புகளையும் பணிகளையும் நினைவு கூர்ந்து அஞ்சலி உரை ஆற்றினர்.

16.11.1991 - முப்பத்து ஆறாவது இயல்நிகழ்வு - மகாஜனக் கல்லூரி.

'சமகால இலக்கியத்தில் எழுத்தாளர் பங்களிப்பு' என்ற தலைப்பிலான கலந்துரையாடலாக அமைந்தது. திரு. அ. யேசுராசா, நவாலியூர் சச்சிதானந்தன், திரு. க. நாகேஸ்வரன், திரு. செல்லப்பா நடராசா ஆகியோர் பங்கு பற்றினர்.

இவ்வருடம் வ. இ .ச. சபையின் நாடகமும் அரங்கியலும் பரீட்சையில் ஆசிரியர் தரத்தில் திருமதி. கோகிலா மகேந்திரன் இரண்டாம் பிரிவில் சித்தி எய்தினார். செல்வி வாசுகி சிதம்பரநாதன், செல்வி சாந்தினி தம்பிராஜா ஆகியோரும் சித்தி அடைந்தனர்.

26.07.1992 - முப்பத்து ஏழாவது நிகழ்வு - மணிவிழா - மகாஜனக் கல்லூரி.

போர் அனர்த்தம் கொடுத்த தொல்லைகளால் நீண்ட இடைவெளியின் பின் கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்களின் மணிவிழாவாக இது அமைந்தது. சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமை ஏற்றார். திரு. கோ.சி.வேலாயுதம், திரு. க.இராசரத்தினம், திரு. அநு. வை. நாகராஜன் ஆகியோர் பாராட்டுரைகளை வழங்கினர். மணிவிழா நாயகருக்கான கௌரவ விருதைப் பண்டிதர் சி.அப்புத்துரை வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ.இ.ச. சபையின் நாடகமும் அரங்கியலும் பாடத்திற்குக் களத்தின் மூலம் தேற்றிய மாணவர்களின் பெறுபேறுகள்:-

| | 1989 | 1990 | 1991 |
|---|---|---|---|
| பரீட்சைக்குத் தோற்றியோர் | 24 | 27 | 17 |
| முதல் வகுப்புச் சித்தி | 16 | 10 | -- |
| இரண்டாம் வகுப்புச் சித்தி | 07 | 13 | 08 |
| சாதாரண சித்தி | -- | 03 | 08 |

05.09.1992 - முப்பத்தெட்டாவது நிகழ்வு - அறிஞர் கௌரவம் - இணுவில் மத்திய கல்லூரி.

வலி. வடக்கிலிருந்து ஏறத்தாழ எல்லோரும் இடம் பெயர்ந்துவிட்ட நிலையில் இந்த நிகழ்வு, ஆண்டு விழாவும் அறிஞர் கௌரவமுமாக இணுவிலில் நடந்தது. மகாஜனக் கல்லூரி இடம் பெயர்ந்து இணுவில் மத்திய கல்லூரியில் மாலைநேரப் பாடசாலையாக நடைபெற்றமையால் இணுவில் மத்திய கல்லூரி ஒத்துழைத்தது. ஆண்டு விழா வாக அமைந்த முதல் அமர்வில், செயலாளர் அறிக்கையும், பொருளாளர் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டன. இரண்டா வது அமர்வு சிவத்தமிழ்ச் செல்வியின் தாயார் திருமதி. தையல்பிள்ளை அப்பாக்குட்டி நினைவு நிகழ்வாக அமைந்தது. சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் நடந்த இந்நிகழ்வில் வலி. வடக்கின் மூத்த இலக்கிய அறிஞர் பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்கள் கௌரவிக்கப்பட்டார். "பண்டிதர் பணியின் பரப்பும் ஆழமும்" என்ற தலைப்பில் பண்டிதர் க. உமாமகேஸ்வரன் அவர்களும், "பண்டிதர் கவிதையின் கருத்தும் நயமும்" என்ற பொருளில் கவிஞர் சோ. ப அவர்களும் உரை யாற்றினர். பண்டிதரின் இலக்கியப் பணிகள் பற்றிய சிறு நூல் வெளியிடப்பட்டது. மூன்றாம் அமர்வான நாடகக் கருத் தரங்கிற்கு கலைப்பேரரசு தலைமை ஏற்றார். "நாடகத்தில் நாம் எங்கே?" என்ற தலைப்பில் திரு. க. ஸ்ரீகணேசன், திரு. சி. ஜெயசங்கர், திரு. ஆ. கனகசபாபதி, திரு. பொ. அருந்தவராசா ஆகியோர் கருத்துரைத்தனர்.

14.01.1993 - முப்பத்தொன்பதாவது நிகழ்வு - தைப்பொங்கல் கருத்தரங்கு - இணுவில் மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கநாத இளைஞர்கள் இந்நிகழ்வை நடத்தினர். கருத்தரங்கு திரு. எஸ். குகதேவன் தலைமையில், "நல்லாசிரியர் என்பவர் யார்?" என்ற பொருளில் இடம்பெற்றது. திருமதி. கோகிலா மகேந்திரன் அரங்கத் தலைவராக அமர, "மாணவர் நோக்கில் நல்லாசிரியர்" என்ற பொருளில் திரு. ஆர். எஸ். நடராஜா அவர்களும் "பெற்றோர் நோக்கில் நல்லாசிரியர்" என்பது பற்றிக் கலாநிதி காரை. செ.சுந்தரம்பிள்ளை அவர்களும், "அலுவலர் நோக்கில் நல்லாசிரியர்" பற்றித் திரு. கோ.சி.வேலாயுதம் அவர்களும் கருத்துரைக்கக் கேட்டோம்.

12.09.1993 - நாற்பதாவது நிகழ்வு - நல்ல மணிவிழா - இணுவில் மத்திய கல்லூரி.

அநு. வை. நாகராஜன் அவர்களின் மணிவிழா சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. திருமதி. கோகிலா மகேந்திரனின் வரவேற்புரையுடன் ஆரம்பமான நிகழ்வுக்குச் சிவத்தமிழ்ச் செல்வி வாழ்த்துரை வழங்கினார். 'மணி' என்ற ஏட்டினை வெளியிட்டுப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரையாற்றினார். பாராட்டுரைகளைத் திரு. டொமினிக் ஜீவா அவர்களும் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களும் நிகழ்த்தினர்.

Library Resource Centre Kilinochchi.

26.12.1993 - நாற்பத்தோராவது நிகழ்வு - நூல்வெளியீடு - இராமநாதன் கல்லூரி.

திரு. கி. மகேந்திரராஜா அவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்த அருணோதயக் கல்லூரி இப்போது இடம் பெயர்ந்து இராமநாதன் கல்லூரி வளாகத்தில் நடந்து கொண்டிருந்தமையால் இராமநாதன் கல்லூரியின் ஒத்துழைப்புக் கிடைத்தது.

முதலாம் அமர்வு களத்தின் பொதுக் கூட்டமாய் அமைந்தது. சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் இதற்குத் தலைமை ஏற்றார்.

இரண்டாவது அமர்வு திருமதி. தையல்பிள்ளை அப்பாக் குட்டி நினைவாக மலர்ந்தது. கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் "கோலங்கள் ஐந்து" என்ற நாடக நூல் வெளியிடப்பட்டது. இந்நூலில் திருமதி. கோகிலா மகேந்திரன், சைவப்புலவர் சு.செல்லத்துரை, திரு. ஏ.ரி.பொன்னுத்துரை, திரு. அநு. வை.நாகராஜன், பண்டிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.அப்புத்துரை ஆகிய ஐவரின் நாடகங்கள் அடங்கியுள்ளன. நூலின் வெளியீட்டுரையைக் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் நிகழ்த்தினார். மதிப்புரை களைத் திரு. வை. தனேஸ்வரன், திரு. த.கலாமணி ஆகியோர் செய்யப் பதிப்பாசிரியர் உரையைப் பண்டிதர் சி.அப்புத்துரை தந்தார்.

30.04.1994 - நாற்பத்து இரண்டாவது இயல்நிகழ்வு - இராமநாதன் கல்லூரி.

இந்நிகழ்வில் கலாநிதி நா.சுப்பிரமணியன் அவர்களின் "இலக்கியச் சிந்தனை மரபு" என்ற நூல் அறிமுகம் நிகழ்ந்தது. பல்கோணப் பார்வை உரையினைத் திருமதி. கோகிலா மகேந்திரன் நிகழ்த்தினார்.

22.10.1995 - நாற்பத்து மூன்றாவது நிகழ்வு - நூல் வெளியீடு - கொக்குவில் இந்துக்கல்லூரி.

அனர்த்தம் மேலும் மேலும் இறுக்கமடைந்தது. முதல் வாரத்தில் மருதனார்மடம் பகுதியிலும் குண்டுவீச்சு இடம் பெற்றதால் இந்த நிகழ்வு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு நகர்ந்தது. இதற்கு அடுத்த வாரம் மிகப் பெரும் இடப்பெயர்வுக்குள் குடாநாடு வீழ்ந்தது. ஆயினும் இந்த நிகழ்வு திருமதி. தையல்பிள்ளை அப்பாக்குட்டி மற்றும் கலாகேசரி ஆ.தம்பித்துரை நினைவாக நடந்தது. திரு. வே. அம்பிகைபாகன் எழுதிய "கலாகேசரியும் தேர்ச் சிற்பக் கலையும்" என்ற நூலைக் கலைப்பேரரசு வெளியிட்டு உரை யாற்றினார். மதிப்பீட்டுரையைத் திருமதி. கோகிலா மகேந்திரன் செய்தார். பங்கு பற்றியோர் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது.

31.01.1997 - நாற்பத்து நாலாவது நிகழ்வு - நூல் வெளியீடு - இராமநாதன் கல்லூரி.

மிகப் பெரும் இடப்பெயர்வின் பின் ஒரு பகுதி மக்கள் வலிகாமம் திரும்பிய நிலையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. திருமதி. தையல்பிள்ளை அப்பாக்குட்டி நினைவாகத் திருமதி. கோகிலா மகேந்திரன் எழுதிய "கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு" என்ற நூலின் வெளியீட்டு விழாவாக இது அமைந்தது. கலாநிதி நா.சுப்பிரமணியன் தலைமை தாங்க, சிவத்தமிழ்ச் செல்வி, திரு. சு.இரத்தினராசா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அறிமுக உரையைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சி.சிவலிங்கராஜா நிகழ்த்தினார். கலாநிதி. நா. ஞான குமாரனின் சிறப்புரையும், குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் ஆய்வுரையும் இடம்பெற்றன.

16.03.1997 - நாற்பத்தைந்தாவது பாராட்டு நிகழ்வு - இராமநாதன் கல்லூரி.

களத்தின் தலைவர் கலாநிதி நா.சுப்பிரமணியன் அவர்கள், இணைப் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றமை தொடர்பாகப் பாராட்டுரைகளும், கலந்துரையாடலும், நண்பகல் உணவுடன் நிகழ்ந்தன.

14.04.1997 - நாற்பத்தாறாவது இயல்நிகழ்வு - இராமநாதன் கல்லூரி.

ஆளுமை தொடர்பான கருத்தரங்காக இது அமைந்தது. சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் "உளவியலில் ஆளுமை" பற்றித் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களும், "இசையில் ஆளுமை" பற்றிச் செல்வி. ந.நவதர்ஷினியும், "நாடகத்தில் ஆளுமை" பற்றிக் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களும் உரை நிகழ்த்தினர். பேராசிரியர் நா. சுப்பிர மணியன் தொகுப்புரை வழங்கினார்.

18.10.1997 - நாற்பத்தேழாவது நிகழ்வு - நூல் வெளியீடு - இராமநாதன் கல்லூரி.

திருமதி. கோகிலா மகேந்திரனின் "வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்" சிறுகதைத் தொகுதி வெளியிடாக இது அமைந்தது. சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ் கல்வி வலயம் 2 இன் பணிப்பாளர் திரு. சி.சிவராஜா கலந்துகொண்டார். சிவத்தமிழ்ச் செல்வியின் ஆசியுரை, தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆ. கமலநாதனின் வாழ்த்துரை ஆகியவற்றுடன் தொடங்கிய நிகழ்வில் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் வெளியீட்டுரை வழங்கினார். "சிறுகதை களில் உளவியல் பண்புகள்" பற்றி டாக்டர் சி.சிவசங்கரும், "சிறுகதைகளின் வடிவமும் உத்தியும்" பற்றித் திருமதி. பா.கணேசதுரை அவர்களும், "சிறுகதைகளில் கலை யாக்கத்திறன்" பற்றிக் கவிஞர் சோ.ப அவர்களும் உரை யாற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14.07.1998 - நாற்பத்தெட்டாவது நிகழ்வு - மணிவிழா - இளவாலை மெய்கண்டான் ம.வி.

சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் மணிவிழாவாக இது அமைந்தது. திருமதி. கோகிலா மகேந்திரன் தலைமையில், சைவப்புலவர் அவர்கள் அதிபராகப் பணியாற்றிய பாடசாலையில் இவ்விழா நடைபெற்றது. கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களால் எழுதப்பட்ட "அரங்கக் கலைஞர் ஐவர்" என்ற நூல் வெளியிடப்பட்டது. அந்த ஐவரில் ஒருவர் சைவப்புலவர் ஆவார்.

30.4.1999 - நாற்பத்தொன்பதாவது நிகழ்வு - கவிதை அனுபவம் - இணுவில் மத்திய கல்லூரி.

திருமதி. தையல்பிள்ளை அப்பாக்குட்டி நினைவு இலக்கிய நிகழ்வில் கவிஞர் சோ.ப. வின் "வடக்கிருத்தல்" கவிதைத் தொகுதி அனுபவங்கள் பகிரப்பட்டன. திருமதி. கோகிலா மகேந்திரன் தலைமை தாங்க, இணுவில் மத்திய கல்லூரி அதிபர் துரை எங்கரசு அவர்கள் தொடக்க உரை நிகழ்த்தினார். நல்லூர் ப.நோ.கூ. சங்கத் தலைவர் பெ.கனக சபாபதி அவர்கள் வாழ்த்துரை வழங்க, திரு. க.ஸ்ரீகணேசன் அனுபவ உரை செய்தார். பேராசிரியர் நா.சுப்பிரமணியன் அவர்கள் ஆய்வுரை ஆற்றினார். சோலைக்குயில் அவைக் காற்றுக்களம், தெஸ்பியன் கலை வட்டம் ஆகிய அமைப் புக்களின் கவிதா நிகழ்வும் சிறப்புற அமைந்தது.

26.02.2000 - ஐம்பதாவது நிகழ்வு - நூல் வெளியீடு - யூனியன் கல்லூரி மருதனார்மடம்.

திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களின் "எங்கே நிம்மதி?" என்ற உளவியல் கட்டுரைத் தொகுதியின் அறிமுக விழாவாக இது அமைந்தது. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இடம் பெயர்ந்து மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் ஒரு புறத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. அங்கு இந்நிகழ்வு இடம்பெற்றது.

25.02.2001 - ஐம்பத்தோராவது நிகழ்வு - நூல் வெளியீடு - ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபம்.

பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களின் "நற்சிந்தனைகள் நாற்பது", திருமதி. கோகிலா மகேந்திரனின் "விஞ்ஞானக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள்" ஆகிய இரு நூல்களின் வெளியீடாக இது அமைந்தது. யுத்த அனர்த்தம் தொடர்ந்து கொண்டிருந்தது. எமது மத்திய குழு உறுப்பினர்களில் கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்கள் காலமாகிவிட்டார். காப்பாளர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் காலமாகிவிட்டார். மத்திய குழு உறுப்பினர்களில் திரு. க. பாலசுந்தரம் அவர்களும், குறமகள் அவர்களும் புலம்பெயர்ந்து வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார்கள். உறுப்பினர்களும் பலரும் சிதறிவிட்டார்கள். இந்த நிலையில் சந்திப்புகள் அருந்தலாகின. ஆயினும் நாங்கள் முற்றாகச் சோர்ந்து போய்விடவில்லை.

இந்நிகழ்வில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். யாழ் மேலதிக அரச அதிபர் திரு. து. வைத்திலிங்கம் அவர்கள் நூல்கள் இரண்டையும் வெளியிட்டு வைத்து உரையாற்றினார். திருமதி. றெ. இருதயநாதன் அவர்கள் ஆசியுரை வழங்கினார். நூல்களின் மதிப்புரைகளைச் செல்வி சி.சிவமலர், திருமதி. பா.கணேசதுரை ஆகியோர் செய்தனர். விஞ்ஞானக் கதைகள் நூலுக்குரிய படங்களை வரைந்துதவிய மானியூர் ரட்ணேஸ் அவர்கள், ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு. திருமுருகன் அவர் களால் கௌரவிக்கப்பட்டார்.

05.05.2003 - ஐம்பத்து இரண்டாவது நிகழ்வு - நூல் வெளியீடு - நல்லூர்.

இணைச் செயலர் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களின் பவளவிழாவைக் கொண்டாட விரும்பினோம். நாட்டு நிலைமை திருப்திகரமாக இல்லாததாலும் கலைப் பேரரசு அவர்கள் சுகயீனமாக இருந்ததாலும் அவர் இடம் பெயர்ந்து தங்கியிருந்த நல்லூர் வீட்டில் இந்நிகழ்வு நடைபெற்றது. ஏ.ரி.பொ அவர்களின் கலைப்பணிகள் தொடர்பாகத் திருமதி. கோகிலா மகேந்திரனால் எழுதப்பட்ட "அரங்கக் கலையில் ஐம்பதாண்டு" என்ற நூல் வெளியிடப்பட்டது.

06.03.2004 - ஐம்பத்து மூன்றாவது நிகழ்வு - நூல் வெளியீடு - இராமநாதன் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களின் "முகங்களும் மூடிகளும்" என்ற சிறுகதைத் தொகுதி வெளியீடாக இது அமைந்தது. களத்தின் தலைவர் பேராசிரியர் நா.சுப்பிரமணியன் அவர்களும், மத்திய குழு உறுப்பினர் திருமதி. கௌசலா சுப்பிரமணியன் அவர்களும் புலம் பெயர்ந்துவிட்ட போதிலும் இங்கிருந்தோர் இணைந்து செயற்பட்டோம். திருமதி. ச.கனகேஸ்வரன் அவர்கள் ஆசி வழங்க, திருமதி. றெ.இருதயநாதன், புலவர் ம. பார்வதி நாதசிவம், கவிஞர் எஸ். துரைசிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்க, கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் வெளியீட்டுரை வழங்கினார். கலாநிதி த.கலாமணி, செல்வி. சி.சிவமலர் ஆகியோர் ஆய்வுரைகளை வழங்கினர்.

03.08.2004 - ஐம்பத்து நாலாவது நிகழ்வு - நூல் வெளியீடு - விக்ரோறியாக் கல்லூரி.

மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ச.பொ. கனக சபாபதி அவர்களின் "மாறன் மணிக்கதைகள்" (சிறுவர் கதைகள்) வெளியீடாக அமைந்தது. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திருமதி. அ.வேலுப்பிள்ளை தலைமை தாங்கினார். திரு. கி.மகேந்திரராஜா அவர்களின் வரவேற்புரை, திரு. சி.செல்லையா அவர்களின் வாழ்த்துரை ஆகியவற்றைத் தொடர்ந்து, பிரதம விருந்தினராக வருகை தந்த வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. றெ. இருதயநாதன் அவர்களின் உரை அமைந்தது. வெளியீட்டுரையைச் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் முன்வைத்தார். திரு. த. சிவகுமாரன், திரு. ஈ.குமரன் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்தினர். திருமதி. கோகிலா மகேந்திரன் பதிப்பாசிரியர் சார்பில் ஏற்புரையும் நன்றியுரையும் வழங்கினர். திரு. எஸ். துரைவீரசிங்கம் அவர்கள் ஓவியர் கௌரவம் பெற்றார்.

29.10.2006 - ஐம்பத்து ஐந்தாவது நிகழ்வு - நூல் வெளியீடு - இராமநாதன் கல்லூரி.

மிகப்பெரும் போர் ஒன்று வெடித்திருந்த நிலையில் இந் நிகழ்வு இடம்பெற்றது. பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களும் கொழும்புக்கு இடம் பெயர்ந்துவிட்டார். புலவர் ம.பார்வதிநாதசிவம் அவர்களின் "மானம் காத்த மறக்குடி வேந்தன்" என்ற காவியம் வெளியிடப்பட்டது. வெளியீட்டுரையைத் திருமதி கோகிலா மகேந்திரன் நிகழ்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதனார்மடத்தில் தற்காலிகமாக இயங்கிய யூனியன் கல்லூரி மண்ட பத்தில் கலை இலக்கியக் கள நிகழ்வு ஒன்றில் எமது முன்னைநாள் காப் பாளர் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் (2 000)





ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற நூல் வெளியீட்டில் எழுத்தாளர், முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் சிறப்புப் பிரதிகளை வழங்குகிறார். (2001)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் இப்போதைய தலைவர் சைவப்புலவர். கலாபூஷணம் சு. செல்லத்துரை அவர்கள் உரையாற்றுகிறார். முன்னைநாள் காப்பாளர் திரு. சி. சிவமகாராஜா மேடையில் உள்ளார். (2001)



இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கலை இலக்கியக்கள நிகழ்வில் புலவர். ம. பார்வதிநாதசிவம் வாழ்த்துரை வழங்குகிறார். (2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02.05.2007 - ஐம்பத்தாறாவது நிகழ்வு - நூல் வெளியீடு - கொழும்புத் தமிழ்ச்சங்கம்.

பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களின் "ஈழத்துத் தமிழ்ப் புலவர் வரலாறு - பாகம் I" வெளியீடாக இவ்விழா அமைந்தது. களத்தின் மத்திய குழு உறுப்பினர் திரு. கி. மகேந்திரராஜா, திருமதி. கோகிலா மகேந்திரன் ஆகியோரும் கொழும்புக்கு இடம் பெயர்ந்த நிலையில் இவ்விழா கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடை பெற்றது. பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்கள் தலைமை தாங்க, தென்கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திரு. க. இரகுபரன் வெளி யீட்டுரை செய்தார். நூல் நயப்புரையைப் பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வ.மகேஸ்வரன் அவர்கள் நிகழ்த்தக் கேட்டோம். நூல் மதிப்புரை திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

07.10.2007 - ஐம்பத்தேழாவது நிகழ்வு - நூல் வெளியீடு - கொழும்பு தமிழ்ச்சங்கம்.

சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் "அரங்கப் படையல்" நூல் வெளியீடாக இது அமைந்தது. சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களும் இப்போது கொழும்புக்கு இடம்பெயர்ந்திருந்தார். பேராசிரியர் சபா. ஜெயராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திரு. தி. சி. அமிர்தலிங்கம் அவர்களின் வரவேற்புரையையும் பன் மொழிப் புலவர் த. கனகரத்தினம் அவர்களின் வாழ்த் துரையையும் தொடர்ந்து சட்டத்தரணி சோ.தேவராஜா அவர்கள் வெளியீட்டுரை நிகழ்த்தினார். திருமதி. கோகிலா மகேந்திரனின் ஆய்வுரையும், திரு. கி. மகேந்திரராஜா அவர்களின் நன்றியுரையும் இடம்பெற்றன. நீர்கொழும்பு விஜயரத்தினம் மத்திய கல்லூரி மாணவர்களின் "யாருக்கச் சொந்தம்" என்ற நாட்டிய நாடகம் நிகழ்வுக்கு அணி சேர்த்தது.

06.03.2008 - ஐம்பத்தெட்டாவது நிகழ்வு - நூல் வெளியீடு - கொழும்பு தமிழ்ச் சங்கம்.

திரு. ச. பொ. கனகசபாபதி அவர்களின் இரு நூல்கள் வெளியீடு. கனடாவில் வசிக்கும் முன்னாள் மகாஜனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி அதிபரும், விலங்கியல் ஆசானுமாகிய திரு. ச. பொ. கனகசபாபதி அவர்களின் "மனம் எங்கே போகிறது?" என்ற உளவியல் கட்டுரைத் தொகுதியும், "திறவுகோல்" என்னும் விஞ்ஞானக் கட்டுரைத் தொகுதியும் தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தினால் கொழும்பில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. இந் நிகழ்வுக்குச் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமை தாங்க, பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்கள் வெளியீட்டுரை நிகழ்த்தினார். "திறவுகோல்" நூலுக்கான மதிப்புரையை மொறட்டுவப் பல்கலைக்கழக விரிவுரை யாளர் திரு. ம.பிரவீணன் அவர்களும், "மனம் எங்கே போகிறது?" நூலுக்கான மதிப்புரையை வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தன் அவர்களும் நிகழ்த்தினர்.

25.05.2008 - ஐம்பத்தொன்பதாவது பாராட்டு நிகழ்வு - கொழும்பு.

திரு. அநு. வை. நாகராஜன் அவர்களின் எழுபத்தைந் தாவது பிறந்த தினத்தை ஒட்டிக் கொழும்பில் வெள்ள வத்தை 55வது ஒழுங்கையில் இருந்த அவரது வீட்டிற்குக் கலை இலக்கியக் கள உறுப்பினர்கள் சென்று அவரைப் பாராட்டிக் கலந்துரையாடி, வாழ்த்தி மகிழ்ந்தோம். சைவப் புலவர் சு.செல்லத்துரை திரு.கி.மகேந்திரராஜா, பண்டிதர் சி.அப்புத்துரை, திருமதி. கோகிலா மகேந்திரன் போன்ற பலர் இதில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

21.09.2008 - அறுபதாவது நிகழ்வு - கொழும்பு தமிழ்ச் சங்கம்.

திருமதி. கோகிலா மகேந்திரனின் "மனம் எனும் தோணி" உளவியல் கட்டுரை நூல், திருமதி. கோகிலா மகேந்திரன், திரு. ம.பிரவீணன் ஆகியோரின் "புத்துணர்ச்சிப்பூங்கா" தொலைக்காட்சி உரை இறுவட்டு ஆகியவற்றின் வெளி யீடாக இது அமைந்தது. கலாபூஷணம் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில், திரு. த.பூ.முருகையா அவர்கள் வாழ்த்துரையும், முனைவர் சபா ஜெயராசா அவர்கள் வெளியீட்டுரையும் வழங்கக் கேட்டிருந்தோம். திறனாய்வுரைகளை முனைவர் வ.மகேஸ்வரன், வைத்திய நிபுணர், எஸ்.சிவதாஸ் சட்டத் தரணி, ந.காண்டீபன் ஆகியோர் வழங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28.12.2008 - அறுபத்தோராவது நிகழ்வு - அமுதவிழா - கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபம்.

பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களின் அமுதவிழாவாக அமைந்த இந்த நிகழ்வில் ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு பாகம்-2 என்ற நூல் வெளியிடப்பட்டது.

26.04.2009 - அறுபத்திரண்டாவது நிகழ்வு - மணிவிழா - கொழும்பு தமிழ்ச் சங்கம்.

அருணோதயக் கல்லூரி அதிபராக இருந்து ஓய்வு பெறும் திரு. கி.மகேந்திரராஜா அவர்களின் மணிவிழாவாக இது அமைந்தது. திருமதி. கோகிலா மகேந்திரனால் தொகுக்கப்பட்ட "சீர்மியச் சிறுகதை" என்ற நூலும் வெளியிடப்பட்டது. சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலா பூஷணம் சி.அப்புத்துரை அவர்களும், கவிஞர் சோ. ப அவர் களும் வாழ்த்துரை வழங்கினர். வெளியீட்டுரை பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களால் நிகழ்த்தப்பட்டது. திரு. கி.மகேந்திரராஜா அவர்களின் சேவைக்கான பாராட்டுரையை அருணோதயக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. அ. ஸ்ரீகுமரன் அவர்கள் வழங்கினார். மற்றும் பலரது சேவை நலப் பாராட்டுரைகளுடன் விழா நிறைவுக்கு வந்தது.

23.05.2009 - அறுபத்து மூன்றாவது நிகழ்வு - பவளவிழா - கொழும்பு தமிழ்ச் சங்கம்.

களத்தின் பொருளர் இலக்கிய வித்தகர் அநு. வை. நாகராஜன் அவர்களின் பவளவிழாவும் "கருத்தும் எழுத்தும்" நூல் வெளியீடுமாக இந்நாள் அமைந்தது. நிகழ்வின் ஆரம்பத்தில் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள் அக அமைதிப் பயிற்சியும் வரவேற்புரையும் செய்தார். சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில் "அநு. வை. நாகராஜனின் கல்விப்பணிகள்" பற்றிப் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களும், "அநு. வை. நா. வின் இலக்கியப் பணிகள்" பற்றிச் சட்டத்தரணி சோ.தேவராஜா அவர்களும் உரையாற்றினர். "இலக்கிய வித்தகர் அநு. வை. நாகராஜன் அவர்களின் இலக்கியப் பணிகள்" என்ற நூலும் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.07.2009 - அறுபத்து நான்காவது அஞ்சலி நிகழ்வு - கொழும்பு தமிழ்ச் சங்கம்.

எமது முன்னாள் காப்பாளர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் காலமாகி ஓராண்டு நிறைவு பெறுவதை ஒட்டி அஞ்சலி நிகழ்வும், "சிவத்தமிழ்ச் செல்வம்" நூல் அறிமுகமுமாக இந்நிகழ்வு இருந்தது. கலாபூஷணம் சு.செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் "தங்கத் தலைவி" என்ற தலைப்பிலான விசேட உரையைத் திருமதி. கோகிலா மகேந்திரன் நிகழ்த்தினார். "சிவத்தமிழ்ச் செல்வம்" மறுபதிப்பு அறிமுக உரையைச் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க.இரகுபரன் நிகழ்த்தினார். நிறைவாக இசை அஞ்சலி செலுத் தப்பட்டது.

04.09.2009 - அறுபத்து ஐந்தாவது நிகழ்வு - பொதுக் கூட்டம் -கொழும்பு.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் களத்தின் செயற்பாடுகள் குறைந்திருந்தாலும் நூல் வெளியீடுகள் தொடர்ந்து நடைபெற்றே வந்தன. வடபகுதியில் வசிக்கவும் செயற்படவும் இயலுமா என்ற நிலையில் களத்தின் அங்கத்தவர் பலரும் கொழும்பில் வசிக்க நேர்ந்த சூழலில் கொழும்பை மையப்படுத்தித் தற்காலிகமாக இயங்குவது எனக் கருதிப் பொதுக்கூட்டம் ஒன்று வெள்ளவத்தை இல. 70, பசல்ஸ் ஒழுங்கையில் இணைச் செயலர் திருமதி. கோகிலா மகேந்திரன் தங்கியிருந்த வீட்டில் நடைபெற்றது. களத்தின் காப்பாளர்கள் மூவரும் இல்லாத நிலையில், புதிய காப்பாளர்கள் நியமிக்கப்பட்டு, மத்திய குழுவும் புனரமைக்கப்பட்டது. எதிர்காலத் திட்டங்கள் ஆராயப் பட்டன.

25.09.2009 - அறுபத்தாறாவது பாராட்டு நிகழ்வு - கொழும்பு தமிழ்ச் சங்கம்.

பல்கலை ஆளுமை விருதாளர் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள் கொடகே தேசிய இலக்கிய விருது பெற்றமை தொடர்பான தேநீராடலாக இது அமைந்தது. கலாபூஷணம் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில் பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள் வாழ்த்துரைக்க, திருமதி. பத்மா சோமகாந்தன் பொன்னாடை போர்க்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்கள் மாலையிட்டுக் கௌரவிக்கத், திருமதி. நேசபூபதி நாக ராஜன் அவர்கள் வாழ்த்துப்பா இசைத்து வளம் சேர்த்தார். பாராட்டுரைகளைத் திரு. வேலமுதன், கவிஞர் எஸ். துரைசிங்கம், பேராசிரியர் அ.சண்முகதாஸ், திரு. கே.எஸ்.சிவகுமாரன், திரு. ம.பிரவீணன், டொமினிக் ஜீவா, செல்வி. சற்சொரூபவதி நாதன் போன்ற பலர் வழங்கினர்.

29.11.2009 - அறுபத்தேழாவது நிகழ்வு - மலர் வெளியீடு - கொழும்பு தமிழ்ச் சங்கம்.

தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை முன்னாள் அதிபர், கவிஞர் திரு. செல்லையா சிவசுப்பிரமணியம் (விழிசைச் சிவம்) அவர்களின் பத்தாம் ஆண்டு நினைவு நிகழ்வு, மலர் வெளியீடு, மாற்று வலுவுடையோர் தினம் ஆகியவற்றின் கூட்டாக இந்நாள் அமைந்தது. பண்டிதர் சி. அப்புத்துரை அவர்கள் தலைமையில் நடந்த நிகழ்வில் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் நினைவுப் பேருரை நிகழ்த்தினார். விழிசைச் சிவம் நினைவு மலர் வெளியீட்டுரையைச் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. சாந்தரூபி புவனேந்திரா நிகழ்த்த "மாற்று வலுவுடை யோருக்கான உதவி" என்ற விசேட உரையை வைத்திய நிபுணர் எஸ்.சிவதாஸ் செய்தார். மலராசிரியர் சார்பில் நாடக கலாவித்தகர் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள் உரையாற்றினார். மாற்று வலுவுடையோரின் கலை நிகழ்வுகளும் அவர்களுக்கான பரிசளிப்பும் நிகழ்ந்தன.

07.02.2010 - அறுபத்தெட்டாவது நிகழ்வு - பரிசளிப்பு - கொழும்பு தமிழ்ச் சங்கம்.

தினக்குரல் அநுசரணையுடன் களம் நடத்திய மேல்மாகாண மாணவருக்கான சிறுகதைப் போட்டியின் பரிசளிப்பு விழாவும் பட்டறையுமாக இந்நிகழ்வு காலையில் நிகழ்ந்தது. கலாபூஷணம் சு. செல்லத்துரை தலைமையில் திரு. கோ.சி.வேலாயுதம் அவர்களின் வரவேற்புரை, முனைவர். சபா. ஜெயராசாவின் வாழ்த்துரை ஆகியவற்றோடு பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது. கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என்ற இரு பிரிவுகளில் நடத்தப்பட்ட போட்டியில் முதற்பரிசு ரூபா 3000/=, இரண்டாம் பரிசு ரூபா 2000/=, மூன்றாம் பரிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபா 1500/= ஆகியவற்றுடன் ஆறுதல் பரிசுகளுக்கு 500/=வும் வழங்கப்பட்டன.

பரிசு பெற்றோர்:-

கீழ்ப்பிரிவு:-

முதலாம் இடம் :- ஹஜனி ஜோன் - கொழும்பு - 4

இரண்டாம் இடம் :- சுகி றொஜஸ்னி அகஸ்டின்- கொழும்பு - 4

மூன்றாம் இடம் :- நளினா செல்வநாதன் - கொழும்பு - 6

ஆறுதல் பரிசுகள்:-

கணேசமூர்த்தி ரகுபரன் - இரத்மலானை
நிலக்ஸி இரட்ணம் - கொழும்பு - 4
துளசிகா இராஜரட்ணம் - கொழும்பு - 4
சந்திரசேகர சுவிஷகா - நீர்கொழும்பு
காயத்திரி பரமசிவம்- கொழும்பு - 4
சுரேந்திரகுமார் ருசாந்தி- நீர்கொழும்பு
ராஜநாதன் சஜானா- கொழும்பு - 4

மேற்பிரிவு:-

முதலாம் இடம் :- பவனீதா லோகநாதன்- கொழும்பு - 6

இரண்டாம் இடம் :- சேகர் சுபாஜினி- நீர்கொழும்பு

மூன்றாம் இடம் :- தர்சிகா இராசரத்தினம் - நீர்கொழும்பு

ஆறுதல் பரிசுகள்:-

இலங்கரட்ணம் சுஜித் - இரத்மலானை
செல்வரத்தினம் விராஜ் - நீர்கொழும்பு
கமலேஸ்வரன் கிரிசாந்தகுமார்- நீர்கொழும்பு
இரத்தினசிங்கம் ரவிசங்கர் - நீர்கொழும்பு
வசந்தகுமார் சதீஸ்வரன் - இரத்மலானை
சிவரஞ்சன் ஷானிகா - இரத்மலானை
சுப்பிரமணியம் சிவகுகன் - இரத்மலானை

சிறுகதைப் பட்டறையின் அறிமுக உரையை இலக்கிய வித்தகர் திருமதி. கோகிலா மகேந்திரன் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்” என்ற தலைப்பில் திருமதி. ராஜி கெங்காதரன் விளக்கம் தந்தார். “சிறுகதையில் அழகியல்” பற்றி விரிவுரையாளர் திரு. க. ரகுபரன் உரை யாற்றினார். “சிறுகதை எழுதுவது எப்படி?” என்று திருமதி. வசந்தி தயாபரன் அவர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது. மாணவர்களும் சிறுகதை ஆர்வலர்களும் பயன் பெற்றனர்.

23.05.2010 - அறுபத்தொன்பதாவது நிகழ்வு - அறிமுக விழா - இராமநாதன் கல்லூரி.

இலக்கிய வித்தகர் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களின் “உள்ளம் பெருங் கோயில்” உளவியல் நூல் அறிமுக விழாவாக இது அமைந்தது. மருதனார்மடத்தில் நடந்த இந்நிகழ்வு அக அமைதிப் பயிற்சியுடனும் திரு. சி.சிவராஜன் அவர்களின் வரவேற்புரையுடனும் ஆரம்ப மானது. திரு. ஆறு. திருமுருகன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். திருமதி. சிவமலர் சுந்தர பாரதி அவர்கள் தலைமை ஏற்க, முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயப் பணிப்பாளர் திரு. ப.விக்னேஸ்வரன் அவர்கள் வெளியீட்டுரை நிகழ்த்தினார். கவிஞர் சோ.ப. அவர்களின் ஆய்வுரையைத் தொடர்ந்து திருமதி. பாகீரதி கணேசதுரையின் நெறியாள்கையில் கலை நிகழ்வு இடம் பெற்று நிகழ்வுகள் நிறைவுக்கு வந்தன.

15.06.2010 - எழுபதாவது நிகழ்வு - சிறுகதைப் பட்டறை - நீர்கொழும்பு விஜயரத்தினம் ம.வி.

சைவப்புலவர் சு.செல்லத்துரை, திருமதி. கோகிலா மகேந்திரன், திரு. கோ.சி.வேலாயுதம், திருமதி. வசந்தி தயாபரன், திருமதி. ராஜி கெங்காதரன் ஆகியோர் வளவாளராகச் சென்று இந்நிகழ்வைப் பாடசாலையில் நடத்தினோம். நூறுக்கு மேற்பட்ட மாணவர்களும் பல ஆசிரியர்களும் பங்குபற்றினர். திருமதி. சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களும் குழுவுடன் கூட வந்து நிகழ்ச்சி சிறப்பெய்த உரமூட்டினார்.

09.10.2010 - எழுபத்தோராவது நிகழ்வு - மணிவிழா - கொழும்பு தமிழ்ச் சங்கம்.

இலக்கிய வித்தகர் திருமதி. கோகிலா மகேந்திரனின் மணி விழா, “சோலைக்குயில் மலர்” வெளியீடு, சீர்மியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டமளிப்பு நிகழ்வு, மனித நேயச் சட்டத்தரணி, மனித நேயச் சீர்மியர் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகளின் கூட்டாக இந்நாள் அமைந்தது.

சோலைக்குயில் ஆற்றுப்படுத்தல் மையம்:-

காலத்தேவை கருதிய செயற்பாடுகளில் ஒன்றாக உளவியல் துறையில் சீர்மியர்களை உருவாக்குவதும் அமைந்தது. அதற்கேற்பச் சோலைக்குயில் ஆற்றுப்படுத்தல் மையம் ஆரம்பிக்கப்பட்டது. திருமதி. கோகிலா மகேந்திரனின் ஒழுங்கமைப்பில், உளவைத்திய நிபுணர் எஸ்.சிவதாஸ் அவர்களின் உதவியோடு ஆற்றுப்படுத்தல் நிகழ்ந்து வந்தது. 07.02.2009 இல் செய்யப்பட்ட ஒரு கலந்துரையாடலின் பின் ஒன்பது மாத காலச் சீர்மியர் பயிற்சி இல. 70, பஸல்ஸ் ஒழுங்கையில் வழங்கப்பட்டது.

மணிவிழா நிகழ்வுகள் மூன்று அரங்குகளாக நிகழ்ந்தன.

1) சிவத்தமிழ்ச் செல்வி அரங்கு

இவ்வரங்கில் சோலைக்குயில் மலர் வெளியிடப்பட்டது. பேராசிரியர் சபா ஜெயராசா தலைமை தாங்க, வெளியீட்டுரையைத் தென்கிழக்குப் பலக்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் திரு. க.இரகுபரன் நிகழ்த்தினார். மலர் மதிப்புரையைத் திருமதி. வசந்தி தயாபரன் வழங்கக் கேட்டோம்.

2) விழிசைச் சிவம் அரங்கு

இவ்வரங்கில் சீர்மியர் பட்டமளிப்பு இடம்பெற்றது. பட்டமளிப்புப் பேருரையை மருத்துவ நிபுணர் எஸ்.சிவதாஸ் அவர்கள் நிகழ்த்த, பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் பட்டமளித்தார். பயிற்சி நெறி விரிவுரையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

பட்டம் பெற்றோர்:-

திருமதி. தேவமனோகரி தனராஜ் - ஓய்வுநிலை ஆசிரியர்
செல்வி. கிருபாதேவி வீரசிங்கம் - ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்
திருமதி. ரதி சோதிலிங்கம் - ஓய்வுநிலை அதிபர்
திருமதி. சுமதி நடனமைந்தன் - ஆசிரியர்
செல்வி. நில்மினி பெர்னாண்டோ - ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி. ஜெனிற்றா வாஸ்
வைத்திய கலாநிதி ஜெயலோசனா சுந்தரலிங்கம்
செல்வி. ரூபிகா செந்திவேல்
திருமதி. வளர்மதி துதிகரன்

3) சிவகாமசுந்தரி அரங்கு
இவ்வரங்கில் இருவர் கௌரவம் பெற்றனர்.
"மனிதநேயச் சட்டத்தரணி" கௌரவம் -
திரு. கே.வி.மகாதேவன்
"மனிதநேயச் சீர்மியர்" கௌரவம் - திரு. ச.கருணாகரன்
கௌரவம் வழங்கியவர் - திரு. மு.கதிர்காமநாதன் அவர்கள்.

03.07.2011 - எழுபத்திரண்டாவது நிகழ்வு - நூல் வெளியீடு - கொழும்பு தமிழ்ச் சங்கம்.

03.07.2010இல் திருமதி. சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்கள் காலமானார். அதன் தாக்கத்தினால் களத்தின் தலைவர் கலாபூஷணம் சு. செல்லத்துரை அவர்கள் கவலையுற்றிருந்தார். திரு. கி. மகேந்திரராஜா, திருமதி. கோகிலா மகேந்திரன் குடும்பத்தினர் அவுஸ்திரேலியா சென்றிருந்தனர். அதனால் களத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாகத் தளர்ந்திருந்த நிலையில், அமரர் செ.சிவகாமசுந்தரி அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு ஒன்றுகூடலாக இது அமைந்தது. சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் எழுதிய "வாழ்வாங்கு வாழ்தல்" என்ற நூல் வெளியிடப்பட்டது. ஆத்மசாந்திப் பிரார்த்தனை யுடன் ஆரம்பமான நிகழ்வில் திரு. மு.கதிர்காமநாதன் தலைமையுரை நிகழ்த்தினார். ஆத்மசாந்தி உரையைக் காப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் செய்தார். இந்து கலாசார அமைச்சின் பணிப்பாளர் அவர்கள் தமது உரையில் தம்பதிகளின் வாழ்வுச் சிறப்பையும் சிவகாம சுந்தரி அவர்களின் மனை மாண்பினையும் நினைவு கூர்ந்தார். நூல் வெளியீட்டுரையைப் பேராசிரியர் சபா ஜெயராசா செய்தார். நூல் அறிமுக உரையைத் திருமதி. பத்மா சோமகாந்தன் நிகழ்த்தக் குடும்பத்தின் விருந்துப சாரத்துடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

10.12.2011 - எழுபத்து மூன்றாவது நிகழ்வு - நூல் வெளியீடு - சிட்னி, அவுஸ்திரேலியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய வித்தகர் திருமதி. கோகிலா மகேந்திரனின் "உள்ளத்துள் உறைதல்" நூல் வெளியீடாக இது அமைந்தது. அவுஸ்திரேலியா நாட்டின் சிட்னி நகரில், ஹோம்புஷ் ஆண்கள் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் திரு. தி. திருநந்தகுமார் தலைமையில் இந்த விழா நடை பெற்றது. வைத்திய நிபுணர் வை. மனமோகன் தம்பதியினர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர். வைத்திய கலாநிதி பொன். கேதீஸ்வரன் அவர்களின் வரவேற் புரையின் பின் கலாநிதி சந்திரலேகா வாமதேவா நூல் வெளியீட்டுரையை ஆற்றினார். நூல் நயப்புரைகளை வைத்தியகலாநிதி நளாயினி சுகிர்தன், வைத்திய கலாநிதி ஆனந்தரூபி ரவிச்சந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். வைத்திய நிபுணர் அப்புத்துரை அன்பழகன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுக்கு வந்தது. கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன் நிகழ்வை நெறிப்படுத்தினார்.

15.07.2012 - எழுபத்துநாலாவது நிகழ்வு - வெள்ளிவிழா - கொழும்பு தமிழ்ச்சங்கம்.

கலை இலக்கியக் களத்தின் வெள்ளிவிழா, திருமதி. செ. சிவகாமசுந்தரி அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வு, நான்கு நூல்களின் வெளியீடு ஆகிய வற்றின் சங்கமமாக இந் நாள் விளங்கியது.

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அரங்குக்குச் சைவப் புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமை ஏற்றார். பேராசிரியர் சபா ஜெயராசா, திருமதி. சாந்தி நாவுக்கரசன் ஆகிய இரு போஷகர்கள் முன்னிலையில் திரு. நடராஜா காண்டீபன் தம்பதியினர் முதன்மை விருந்தினராகவும், திரு. என்.ரெங்கநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். கலாநிதி மு.கதிர்காமநாதன் அவர்களின் வாழ்த்துரையைத் தொடர்ந்து திருமதி. சாந்தி நாவுக்கரசன் தொடக்கவுரை ஆற்றினார். "கலை இலக்கியக்களமும் கடந்த காலமும்" என்ற தலைப்பிலான இரண்டாவது சிற்றேட்டினைப் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் அறிமுகம் செய்தார். பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களின் "ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு - பாகம் 3" (கனடாவில் வெளியிடப்பட்டது) திரு. எஸ்.தில்லைநடராஜா அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டது. சைவப்புலவர் சு.செல்லத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் "சிவகாமி தமிழ்" என்ற நூல் திருமதி. வானதி காண்டீபனால் அறிமுகம் செய்யப்பட்டது. "வெள்ளிவிழாப் போட்டிச் சிறுகதைகள்" என்ற நூலைத் திருமதி. ஞா. ஞானசேகர ஐயர் அவர்கள் அறிமுகப்படுத்தினார். "எழுத்தாளர் நோக்கில் சிறுகதை" என்ற தலைப்பிலான சிற்றுரை செல்வி. பவனீதா லோகநாதனால் ஆற்றப்பட்டது. வெள்ளிவிழாப் போட்டிச் சிறுகதை வெற்றியாளர்களுக் கான பரிசுகள் வழங்கப்பட்டன. திருமதி. ராஜி கெங்காதரனின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவடைந்தன.

சிறுகதைப் போட்டி:-

திறந்த போட்டி முடிவுகள்:-

1ம் பரிசு - 10000/= - திரு. பசுபதி உதயகுமார் - அளவெட்டி

2ம் பரிசு - 7000/= - திருமதி. மாலா மதிவதனன் - அளவெட்டி

3ம் பரிசு - 5000/= - திருமதி கமலா கிருபானந்தன் - மல்லாகம்

ஆறுதல் பரிசுகள்:- 1000/=

உஷாநந்தினி கணேசரத்தினம் - மாதகல்
ஜோன் ஷயனி - பம்பலப்பிட்டி
எஸ்.சுகன்யா - நீர்கொழும்பு
எம்.கிருஷாந்தி - நீர்கொழும்பு
எஸ்.கோகிலன் - நீர்கொழும்பு
எம்.தமித்ரா - நீர்கொழும்பு

வலி வடக்கு மாணவர் போட்டி:-

1ம் பரிசு வழங்கப்படவில்லை.

2ம் பரிசு - 7000/= - சிவகாயத்திரிநாயகி கனகசூரியர் - மகாஜனக் கல்லூரி

3ம் பரிசு - 5000/= - சுப்பிரமணியம் கோபிகா - மகாஜனக் கல்லூரி

ஆறுதல் பரிசுகள்:- 1000/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.டிலக்ஷன் - அளவெட்டி அருணாசலம் வி.

சி.நிருஷாந் - கீரிமலை நகுலேஸ்வர ம.வி.

கருணாகரன் பானுஜன் -குட்டியப்புலம் அ.த.க.பா.

21.07.2012 - எழுபத்தைந்தாவது நிகழ்வு - இராமநாதன் கல்லூரி.

களத்தின் வெள்ளிவிழா, நான்கு நூல் அறிமுகம், பரிசளிப்பு, கல்வி உபகரணம் வழங்கல் ஆகிய கூறுகள் கொண்ட நிகழ்வு யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றது. காப்பாளர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் முதன்மை விருந்தினராகத் திரு. ப.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். கௌரவ விருந்தின ராக வலி. வடக்குப் பிரதேச செயலர் திரு. ஸ்ரீமோகனன் அவர்களும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயப் பணிப்பாளர் திரு. ஆ. இராசேந்திரம், பேராசிரியர் கி. விசாகரூபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரன் அவர்களின் வரவேற்புரை, கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் வாழ்த்துரை ஆகியவற்றுடன் தொடங்கிய விழாவில் "கலை இலக்கியக் களமும் கடந்த காலமும்" நூல் அறிமுகத்தைச் சைவப்புலவர் சு.செல்லத்துரை செய்தார். "ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு - பாகம் 3"இன் அறி முகத்தைப் பேராசிரியர் கி.விசாகரூபன் நிகழ்த்த, "சிவகாமி தமிழி"ன் அறிமுகத்தை நாடக கலாவித்தகர் திருமதி. பாகீரதி கணேசதுரை ஆற்றினார். முதுபெரும் புலவர்மணி வை. க. சிற்றம்பலம் அவர்களுக்கும், புலவர் ம. பார்வதிநாதசிவம் அவர்களுக்கும் விசேட கௌரவங்கள் வழங்கப்பட்டன. வெள்ளிவிழாச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றோருக்கான பரிசளிப்பும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஐம்பது மாணவருக்கான ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரண அன்பளிப்பும் நிகழ்ந்தன. தெல்லிப்பழை மகாஜனா, இராமநாதன் கல்லூரி மாணவர்களின் கலை விருந்தையும் ரசித்தோம். திரு. சி.சிவராஜன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவேறின.

10.12.2012 - எழுபத்தாறாவது நிகழ்வு - நினைவுநாள் - கொழும்பு தமிழ்ச்சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மத்திய குழு உறுப்பினர் பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள் கனடாவில் காலமாகியிருந்தார். அவர்களின் சிரார்த்த தினமாக இந்நாள் அமைந்தது. சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருவாவடுதுறை ஆதீனத் திருமுறைப் பயிற்சி மையத்தினர் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்த்தினர். திரு. இ.மு.நாகலிங்கம் அவர்கள் வரவேற்புரை செய்ய, திரு. மு.கதிர்காமநாதன், பன்மொழிப்புலவர் த.கனகரத்தினம் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். "சைவ வாழ்வியற் கருமங்கள்" என்ற தலைப்பில் பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களின் கருத்துகளைச் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தொகுத்திருந்தார். அந்நூலின் அறிமுகத்தைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் திரு. க. இரகுபரன் ஆற்றினார். "பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களின் பன்முகப் புலமையும் தொண்டும்" என்ற தலைப்பிலான கருத்துரையை முனைவர் சபா ஜெயராசா அவர்கள் நிகழ்த்த, பண்டிதரின் நூல்கள் பற்றிய மதிப்பீட்டினைத் திரு. உடுவை தில்லை நடராஜா செய்தார். பண்டிதர் அவர்களின் குடும்ப அநுசரணையுடன் மதிய உணவு விருந்துபசாரமும் "சைவ வாழ்வியற் கருமங்கள்" நூல் அன்பளிப்பும் இடம் பெற்றன. திருமதி. ராஜி கெங்காதரன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவேறின.

24.03.2013 - எழுபத்தேழாவது நிகழ்வு - அறிமுக விழா - கொழும்பு தமிழ்ச்சங்கம்.

மேழிக்குமரன் அவர்களின் ஆறு நூல்கள் அறிமுக விழாவாக இது அமைந்தது. சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக உடுவை தில்லை நடராஜா அவர்கள் கலந்துகொண்டார். வரவேற்புரையைத் திரு. உ. சந்திர குமாரன் அவர்களும், தொடக்க உரையைக் காப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்களும் நிகழ்த்தினர். அறிமுக உரையைக் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரை யாளர் திரு. க.சர்வேஸ்வரன் அவர்கள் செய்தார். ஆய்வுரைகள் வரிசையில் "ஜேர்மனியில் தமிழர் வரலாறு" என்ற நூலை வீரகேசரியின் மூத்த ஊடகவியலாளர் திரு. வ.தேவராஜ் அவர்களும், "காலடிச் சுவடுகள்" என்ற நூலைத் திரு. ஆர்.எஸ்.நடராஜா அவர்களும், "தாலி" என்ற சிறுகதைத் தொகுதியைத் திருமதி. வசந்தி தயாபரனும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆன்மாவின் வாசனை", "தாய்நிலம்" ஆகிய கவிதை நூல்களைச் சட்டத்தரணி கு.இராஜகுலேந்திரா அவர்களும், "நலமாய் வாழ - இயற்கை மருத்துவக் குறிப்பு" நூலைக் கலாபூஷணம் கா.வைத்தீஸ்வரன் அவர்களும் ஆய்வு செய்தனர். திரு. கே.கே.அருந்தவராசா என்ற இயற்பெயர் கொண்ட மேழிக்குமரனின் ஏற்புரையுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

12.01.2014 - எழுபத்தெட்டாவது நிகழ்வு - நூல் வெளியீடு - கொழும்பு தமிழ்ச் சங்கம்.

திருமதி. கோகிலா மகேந்திரனின் "புலச் சிதறல் நெஞ்சம்", கலாநிதி ம.பிரவீணனின் "ஏலியன் கதைகள்" ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழாவாக இது அமைந்தது. சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருமதி. பத்மா சோமகாந்தன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நூல்களின் வெளியீட்டுரையை வைத்திய கலாநிதி எஸ்.ராதா அவர்கள் ஆற்ற, புலச்சிதறல் நெஞ்சத்தின் மதிப்பீட்டுரைகளைத் திருமதி. ராஜி கெங்காதரன் அவர்களும் திரு. மு.தயாபரன் அவர்களும் நிகழ்த்தினர். "ஏலியன் கதைகள்" தொடர்பான மதிப்பீட்டுரைகளைத் திருமதி. வசந்தி தயாபரன், திரு. க.இரகுபரன் ஆகியோர் செய்தனர். திரு. உ.சந்திரகுமாரன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவெய்தின.

26.01.2014 - எழுபத்தொன்பதாவது அறிமுக நிகழ்வு - இணுவில் மத்திய கல்லூரி

இலக்கிய வித்தகர் கோகிலா மகேந்திரனின் "புலச்சிதறல் நெஞ்சம்" கலாநிதி ம.பிரவீணனின் "ஏலியன் கதைகள்" ஆகிய இரு நூல்களின் அறிமுக விழாவாக இது அமைந்தது. திருமதி. ராஜி கெங்காதரனின் வாழ்த்துரையோடு ஆரம்பித்த நிகழ்வுக்குத் திருமதி. சிவமலர் சுந்தரபாரதி தலைமை ஏற்றார். புலச்சிதறல் நெஞ்சத்தின் அறிமுக உரையைத் திருமதி. பாகீரதி கணேசதுரை, பேராசிரியர் சி. சிவலிங்கராசா ஆகியோர் செய்ய. ஏலியன் கதைகளின் அறிமுக உரைகளைத் திரு. பா. மகாலிங்க சிவம், கவிஞர் சோ.ப. ஆகியோர் செய்தனர். மாணவருக்கான கல்வி உபகரணங்களும், பாடசாலை நூலகங்களுக்கான நூற்பொதிகளும் இலவசமாக வழங்கப்பட்டன. சீர்மிய ஆசிரியர்கள் நடித்த "செல்லிடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி" என்ற நாடகம் நிகழ்வை மேன்மைப் படுத்தியது.

20.07.2014 - எண்பதாவது நிகழ்வு - நூல்வெளியீடு - கொழும்பு தமிழ்ச் சங்கம்.

சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் "இன்பத்தமிழ்" நூல் வெளியீடும் அமரர் செ.சிவகாமசுந்தரி நினைவுரையு மாக இந்நிகழ்வு நிகழ்ந்தது.

திரு. கே.எஸ்.சிவகுமாரன் தலைமை ஏற்ற நிகழ்வில் பேராசிரியர் சபா ஜெயராசா முதன்மை விருந்தினரானார். திருமதி. ராஜி கெங்காதரன் நினைவுரையாற்றினார். நூல் வெளியீட்டுரையை முதன்மை விருந்தினர் நிகழ்த்த நயவுரைகளைத் திருமதி. ஞா.ஞானசேகரன், திருமதி. பவானி முகுந்தன் ஆகியோர் ஆற்றக் கேட்டோம்.

13.09.2014 - எண்பத்தோராவது சிறுகதைப்பட்டறை - இணுவில் மத்திய கல்லூரி.

சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில் ஒரு முழுநாள் விழாவாக இது நடந்தது. செல்வி. மதுவந்தி மயூரனின் தமிழ்த்தாய் வாழ்த்தைத் தொடர்ந்து வாழ்த்துரையைப் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் ஆற்றினார். சிறுகதையின் உருவம் பற்றித் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களும் சிறு கதையின் உள்ளடக்கம் பற்றித் திரு. தி.செல்வமனோகரன் அவர்களும், சிறுகதையின் மொழி பற்றித் திருமதி. ராஜி கெங்காதரன் அவர்களும் சிறுகதை ஆக்கக் கொள்கைகள் பற்றித் திரு. இ. இராஜேஸ்கண்ணன் அவர்களும் உரை யாற்றினர். மதிய இடைவேளையின் பின் எழுத்தாளர் தமது சிறுகதை ஒன்றினை வாசித்தலும் கலந்துரையாடலும் இடம் பெற்றது. திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம், திரு. பா.மகாலிங்கசிவம், திரு. க.சட்டநாதன், திரு. சமரபாகு உதயகுமார் ஆகியோர் தமது சிறுகதைகளில் ஒன்றை வாசித்தனர். கதைகள் தொடர்பான அவையோர் கலந்துரையாடல் இடம்பெற்றது. சீனன்கலட்டி ஞானோதய வித்தியாசாலை அதிபர் திரு. சி.சிவராஜனின் நன்றியுரை யுடன் விழா நிறைவு பெற்றது. இங்கு நிகழ்த்தப்பட்ட உரைகளும் வாசிக்கப்பட்ட சிறுகதைகளும் கலந்துரை யாடல் குறிப்புகளும் பின்னர் "சிறுகதை என்பது" என்ற நூலாக வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09.11.2014 - எண்பத்திரண்டாவது நிகழ்வு - நூல் வெளியீடு - இணுவில் இந்துக்கல்லூரி.

தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களமும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்திய பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரனின் இரு நூல் வெளியீட்டு விழாவாக இது அமைந்தது. "இலக்கண மரபு", "தமிழ் இலக்கியத் திறனாய்வும் கோட்பாடும்" ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வுக்கு இலக்கிய வித்தகர் திருமதி. கோகிலா மகேந்திரன் தலைமை ஏற்றார். பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் கி.விசாகரூபன், நயினை கி.கிருபா ஆகியோரின் வாழ்த்துரையுடன் தொடங்கிய விழாவில், இலக்கண மரபு நூலைத் திரு. மு.கௌரிகாந்தன் வெளியிட்டுவைக்க, திரு. பா.மகாலிங்கசிவம் ஆய்வு செய்தார். தமிழ் இலக்கியத் திறனாய்வும் கோட்பாடும் என்ற நூலைக் கலாநிதி க.ஸ்ரீகணேசன் வெளியிடத் திரு. ஈ.குமரன் ஆய்வு செய்தார்.

27.12.2014 - எண்பத்து மூன்றாவது நிகழ்வு - கவிதைப் பட்டறை - இணுவில் மத்திய கல்லூரி.

இந்த முழுநாள் ஒன்றுகூடலில் சிவகாமசுந்தரி அரங்குக்குப் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் தலைமை ஏற்றார். திரு. இரா. சந்திரசேகரசர்மாவின் ஆசியுரை, திருமதி. ராஜி கெங்காதரனின் வரவேற்புரை ஆகியவற்றுடன் ஆரம்பமாகிய அரங்கில், "கவிதையின் யாப்பு" பற்றிச் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களும் "கவிதையின் உருவமும் உள்ளடக்கமும்" பற்றித் திரு. சி.ரமேஷும், புதுக்கவிதை பற்றித் திரு. ம.பா.மகாலிங்க சிவமும், "கவிதையின் கலைத்துவம்" பற்றிக் கலாநிதி ம.பிரவீணனும் உரையாற்றிய பின் கலந்துரையாடல் இடம்பெற்றது. மதிய இடைவேளையின் பின்னரான மாலை அமர்வு அநு. வை.நாகராஜன் அரங்காக அமைய அதற்குக் கவிஞர் சோ.ப. தலைமை ஏற்றார். திரு. பா.பாலமுரளி, திரு. ஜோ.ஜஸ்ரின், திரு. இ.சர்வேஸ்வரா, திருமதி. மாலா மதிவதனன் ஆகியோர் தமது சொந்தக் கவிதைகளை முன்வைத்தனர். புகழ்பெற்ற கவிஞர்களின் கவிதைகளாக மகாகவி, நீலாவணன், சோ.ப, முருகையன் ஆகியோரின் கவிதைகளைத் திருமதி. பாகீரதி கணேசதுரை, திரு. சி.சிவராஜன், திரு. த.சிவகுமாரன், திருமதி. கோகிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேந்திரன் ஆகியோர் கவிதா நிகழ்வாக முன்வைத் தனர். ஆரோக்கியமான கலந்துரையாடலின் பின் திரு. சி. சிவராஜனின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

28.12.2014 - எண்பத்து நாலாவது நிகழ்வு - நூல் வெளியீடும் நாடகமும் - இணுவில் மத்திய கல்லூரி.

மஞ்சள் வெயில் பூத்த ஒரு மாலையில் இது இயல் நிகழ்வாயும் நாடக நிகழ்வாயும் அமைந்தது. சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில் "சிறுகதை என்பது", "விழிசைச் சிவம் ஜனன நூற்றாண்டு மலர்" ஆகிய இரு நூல்களின் வெளியீடும் தண்ணீர் நாடகமும் இடம் பெற்றன. கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களும், அருட்பணி செ.அன்புராசா அடிகளார் அவர்களும் ஆசியுரை வழங்கத் திரு. ச.ஜனார்த்தனன் வரவேற்புரை ஆற்றினார். விழிசைச் சிவம் ஜனன நூற்றாண்டு மலர் வெளியீட்டுரை யைத் திருமதி. சிவமலர் சுந்தரபாரதி முன்வைக்க அறிமுக உரையைத் திருமதி. ராஜி கெங்காதரன் செய்தார். விழிசைச் சிவம் அவர்களின் பாடல் ஒன்று திருமதி. பகீரதி கணேசதுரை அவர்களால் இசைக்கப்பட்டது. "சிறுகதை என்பது" என்ற நூலின் வெளியீட்டுரையைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா உரைக்க அதன் ஆய்வுரையைத் திரு. ஈ.குமரன் அவர்கள் நிகழ்த்தினார். சோலைக்குயில் அவைக் காற்றுக்களம் வழங்கிய "தண்ணீர்" என்ற கவிதை நாடகத்தின் எழுத்துருவைக் கலாநிதி ம. பிரவீணன் ஆக்கியிருந்தார். நாடகத்தை நயந்து வீடு சென்றோம்.

01.08.2015 - எண்பத்தைந்தாவது நிகழ்வு - நூல் வெளியீடு - இணுவில் மத்திய கல்லூரி.

திருமதி. கோகிலா மகேந்திரனின் "நேர்கொண்ட பாவை", சகோதரி யதீஸ்வரியின் "ஆடிப்பாடுவோம்" ஆகிய இரு நூல்களின் வெளியீடாக இந்நாள் அமைந்தது. கலாபூஷணம் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்திய நிபுணர் சீ.நவரத்தினம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். சிவத்தமிழ்ச் செல்வி அரங்கில் பேராசிரியர் தயா சோமசுந்தரம், நீதிபதி இ.வசந்தசேனன் ஆகியோரின் வாழ்த்துரைகள் இடம் பெற்றன. திருமதி. ராஜி கெங்காதரனின் வரவேற்புரையைத் தொடர்ந்து பேராசிரியை திருமதி. ஏ.என்.கிருஷ்ணவேணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களை வெளியிட்டு வைத்தார். மதிப்பீட்டுரைகளை வைத்திய கலாநிதி முல்லை பரமேஸ்வரன், கவிஞர் சோ.ப. ஆகியோர் நிகழ்த்தினர். சோலைக்குயில் அவைக் காற்றுக்களம் நடத்திய ஆசிரியர், அதிபருக்கான ஆறு மாதகால ஆங்கிலப் பயிற்சிநெறியின் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

08.08.2015 - எண்பத்தாறாவது நிகழ்வு - நூல் வெளியீடு - கொழும்பு தமிழ்ச் சங்கம்.

கலாபூஷணம் சு.செல்லத்துரை அவர்களின் "கலையும் வாழ்வும்" நூல் வெளியீடாக இது அமைந்தது. இலக்கிய வித்தகர் திருமதி. கோகிலா மகேந்திரனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் திருமதி. சாந்தி நாவுக்கரசன் (செயலர், நிதி இராஜாங்க அமைச்சு) அவர்கள் கலந்து கொண்டார். திரு. கா.வைத்தீஸ்வரன் அவர்களின் வாழ்த்துரை, திருமதி. ராஜி கெங்காதரன் அவர்களின் வரவேற்புரை ஆகியவற்றுடன் தொடங்கிய நிகழ்வில், களத்தின் போஷகர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்கள் நூல் வெளியீட்டுரை நிகழ்த்தினார். உடுவை தில்லை நடராஜா அவர்களும், திருமதி. பவானி முகுந்தன் அவர்களும் நயவுரைகளைத் தந்தனர். சைவமங்கையர் வித்தியாலய மாணவிகளின் "மங்கையர் மாண்பு" வில்லிசை நிகழ்வுக்கு இனிமை சேர்த்தது. திரு. செ. உ.சந்திரகுமாரன் அவர்களின் மகிழ்வுரையுடன் நிறைவு பெற்ற நிகழ்வைத் திரு. செ.நாவரசன் நெறிப்படுத்தினார்.

13.12.2015 - எண்பத்தேழாவது இயல் நிகழ்வு - கொழும்பு தமிழ்ச்சங்கம்.

திருமதி. கோகிலா மகேந்திரனின் "விழிசைக்குயில்" மலர் வெளியீடும், "நேர்கொண்ட பாவை" நூல் அறிமுகமுமாக இது நிகழ்ந்தது. கலாபூஷணம் சு.செல்லத்துரை தலைமை யில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்வாழ்த்தினைத் திருமதி. ஹம்சானந்தி தர்மபாலன் இசைத்தார். புலோலியூர் ஆ.இரத்தினவேலோனின் வரவேற்புரையும், தினக்குரல் வார மலர் ஆசிரியர் திரு. இ.பாரதி அவர்களின் வாழ்த்துரையும் இடம்பெற்றன. காப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் (புனர்வாழ்வு மீள்குடியேற்ற, இராஜாங்க அமைச்சின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலர்) வெளியீட்டுரையை வழங்கினார். "விழிசைக் குயில்" மலரின் மதிப்பீட்டுரையைத் திருமதி பவானி முகுந்தன் அவர்கள் ஆற்றினார். "நேர்கொண்ட பாவை"யின் மதிப்பீட்டுரையைத் திருமதி. வானதி காண்டீபன் நிகழ்த்தினார். திருமதி. ராஜி கெங்காதரனின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுக்கு வந்தன.

20.12.2015 - எண்பத்தெட்டாவது இயல் நிகழ்வு - இணுவில் மத்திய கல்லூரி.

திருமதி. சிவமலர் சுந்தரபாரதியின் "உன்னால் முடியும்" கவிதைத் தொகுதி வெளியீடு, திருமதி. கோகிலா மகேந்திரனின் "விழிசைக்குயில்" மலர் அறிமுகம், திரு. பா.மகாலிங்கசிவத்தின் "புதைமணல்" சிறுகதைத் தொகுதி அறிமுகம் ஆகிய நிகழ்வுகளின் கூட்டாக இது அமைந்தது. சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சான்றோர் கௌரவம், கலைஞர் கௌரவம், மாணவருக்குக் கற்றல் உபகரணம் வழங்கல் ஆகிய நிகழ்வுகளும் இணைந்தன. பிரதம விருந்தினராக வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா தம்பதியினர் கலந்து கொண்டனர். பேராசிரியர் நா.சண்முகலிங்கன் வாழ்த்துரை வழங்க, பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, "உன்னால் முடியும்" நூலின் வெளியீட்டுரையை ஆற்றினார். "விழிசைக்குயில்" மலர் அறிமுக உரையைக் கவிஞர் சோ.ப. நிகழ்த்த, "புதைமணல்" அறிமுக உரையைக் கலாநிதி ம.பிரவீணன் செய்தார். வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா அவர்கள் நல்லை ஆதீன முதல்வரிட மிருந்து சான்றோர் கௌரவம் பெற, கவிஞர் சோ.ப அவர்கள் கலைஞர் கௌரவம் பெற்றார். திருமதி. த.சிதம்பரநாதன், திருமதி. நே.நாகராஜன் ஆகியோர் கலாபூஷணம் விருது பெற்றமைக்காகக் கௌரவிக்கப் பட்டனர்.

09.04.2016 - 10.04.2016 - எண்பத்தொன்பதாவது நிகழ்வு - கவிதைப் பட்டறை - மல்லாகம் ம.வி.

பல வருட இடைவெளியின் பின் வலி வடக்குப் பிரதேசத்தில் இந் நிகழ்வை ஏற்பாடு செய்தோம். சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில், பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரன், திருமதி. கோகிலா மகேந்திரன், திருமதி. ராஜி கெங்காதரன், கவிஞர் சோ.ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோர் வளவாளராகக் கலந்துகொண்டனர். திருமதி. ச.நாகராஜா அவர்கள் கருத்துரை வழங்கினார். மாணவர் பலர் நிகழ்வில் பங்குபற்றினர். இரண்டாவது நாள் மாணவர்கள் கவிதைகள் எழுதினர். அவை வாசிக்கப்பட்டுச் செம்மையாக்கம் செய்யப்பட்டன. இரண்டு நாளும் பங்கு பற்றிய மாணவருக்கான மதிய உணவும் களத்தினால் வழங்கப்பட்டது.

30.07.2016 - தொண்ணூறாவது நிகழ்வு - முப்பதாவது ஆண்டுவிழா - கொழும்பு தமிழ்ச்சங்கம்.

கலை இலக்கியக் களத்தின் முப்பதாவது ஆண்டு விழாவும் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் "பத்தினித் தெய்வம்", "இறந்தபின் எங்கள் நிலை" ஆகிய நூல்களின் வெளியீடும், சிறுகதை, கவிதைப் போட்டிப் பரிசளிப்பும் சேர்ந்த கூட்டாக இவ்விழா அமைந்தது.

சிவகாமசுந்தரி அரங்கிற்குத் திருமதி. கோகிலா மகேந்திரன் தலைமை ஏற்றார். முனைவர் சபா ஜெயராசா அவர்களும், திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்களும் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டனர்.

திருமதி. நேசபூபதி நாகராஜன் அவர்களின் தமிழ் வாழ்த்துடன் ஆரம்பமான நிகழ்வு, திரு. உ.சந்திரகுமாரனின் வரவேற்புரை, காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தினின் வாழ்த்துரை என்று தொடர்ந்தது. திருமதி. சாந்தி நாவுக்கரசன் தொடக்க உரை நிகழ்த்தினார். முனைவர் சபா ஜெயராசா அவர்கள் நூல்களின் வெளியீட்டுரையை ஆற்றினார். "பத்தினித் தெய்வம்" நூலின் நாடக நயவுரையை உடுவை தில்லை நடராஜா அவர்களும், வில்லிசை நயவுரையைத் திருமதி. பவானி முகுந்தன் அவர்களும் நிகழ்த்தினர். பரிசுக் கதைகள், கவிதைகள் தொடர்பான நயவுரையைத் திருமதி. ராஜி கெங்காதரன் செய்தார். தினக்குரல் வாரமலர் ஆசிரியர் திரு. இ.பாரதி அவர்கள் பரிசில்களை வழங்கிச் சிறப்பித்தார். "தன்வினை தன்னைச் சுடும்" என்ற வில்லிசையைச் சைவ மங்கையர் வித்தியாலய மாணவிகள் ஆற்றினர். கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் திரு. செ.மாவிரதனின் நன்றியுரை, திருமதி. ஹம்சானந்தி தர்மபாலன் அவர்களின் களக்கீதம் ஆகியவற்றுடன் நிகழ்வுகள் நிறைவெய்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசு பெற்றோர்:-

சிறுகதை:-

முதலாம் இடம் - ரம்யஸ்ரீ சிவக்குமார் - வெள்ளவத்தை
இரண்டாம் இடம் - நிலானி சுந்தரமூர்த்தி - புத்தூர்
மூன்றாம் இடம் - அட்சயா கணேசலிங்கம் - தெகிவளை

கவிதை:-

முதலாம் இடம் - எச்.எப்.ரிஸ்னா - கல்கிசை

இரண்டாம் இடம் - கஸ்தூரி மோகன் - ஏழாலை

மூன்றாம் இடம் - அனற் கியூரிகமிலஸ் - மானிப்பாய்

கொழும்புக்கு அருகில் வாழ்வோர் இவ்விழாவில் பரிசுபெற, யாழ்ப்பாணத்துக்கு அருகில் வசிப்போர் யாழ்ப்பாணத்தில் நடந்த விழாவில் பரிசு பெற்றனர்.

17.09.2016 - தொண்ணூற்று ஓராவது ஒன்றுகூடல் - இணுவில் மத்திய கல்லூரி.

களத்தின் முப்பதாவது ஆண்டு விழாவும், சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் "பத்தினித்தெய்வம்", "இறந்தபின் எங்கள் நிலை" ஆகிய நூல்களின் அறி முகமும், மாவை பாரதியின், "ஆரண்ய வாசம்" நூல் வெளி யீடும், பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரனின் "காப்பியதாசன் கட்டுரைகள்" வெளியீடும், "முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பியின் பாடல்கள்" நூல் அறிமுகமும் ஒன்றாக நிகழ்ந்தன. இணைச் செயலர் திருமதி. ராஜி கெங்காதரன் தலைமை ஏற்ற இந்நிகழ்வில், மூத்த எழுத்தாளர் கௌரவம், கவிதை, சிறுகதைப் போட்டிப் பரிசளிப்பு ஆகியவையும் நடந்தன. பிரதம விருந்தினராகத் திருமதி. சரோஜா சிவச்சந்திரன் கலந்து கொண்டார். "காப்பியதாசன் கட்டுரைகள்" வெளியீட்டுரையைத் திரு. ஈ. குமரன் அவர்களும், "ஆரண்ய வாசம்" வெளியீட்டுரையைத் திரு. பா.மகாலிங்கசிவமும், சைவப்புலவர் சு.செல்லத்துரையின் நூல்களின் அறிமுக உரையைத் திருமதி. சிவமலர் சுந்தரபாரதியும், "முதுதமிழ்ப்புலவர் பாடல்கள்" நூல் அறி முக உரையைப் பண்டிதர் வ.ஆ.தங்கமயில் அவர்களும் நிகழ்த்தினர். மூத்த எழுத்தாளர் கௌரவத்தினைப் பிரதம விருந்தினர் அவர்களிடமிருந்து திருமதி. யோகேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பிரகாசம் பெற்றுக்கொண்டார். "தா, தகிட" என்ற ஜதிக் கதம்பம் மகாஜனக் கல்லூரி மாணவர்களால் நிகழ்த்தப் பட்டது. நிகழ்வின் நெறிப்படுத்துனராகத் திருமதி. கோகிலா மகேந்திரன் செயற்பட்டார்.

31.10.2016 - தொண்ணூற்று இரண்டாவது அஞ்சலி நிகழ்வு - கொழும்பு தமிழ்ச்சங்கம்.

கனடாவில் வசித்த களத்தின் மத்திய குழு உறுப்பினர் குற மகள் (திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம்) அவர்கள் காலமானதையடுத்து அவருக்கான அஞ்சலி நிகழ்வாக இது அமைந்தது. திருமதி. பத்மா சோமகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையைச் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் வழங்க, அஞ்சலி உரைகளை ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரன், திரு.தம்பு சிவா, திருமதி. வளர்மதி சுமாதரன் ஆகியோர் நிகழ்த்தினர். திருமதி. ராஜி கெங்காதரன் நன்றியுரை ஆற்ற நிகழ்வு நிறைவு பெற்றது.

07.01.2017 - தொண்ணூற்று மூன்றாவது நிகழ்வு - இலக்கியவிழா - இணுவில் மத்திய கல்லூரி.

கலாபூஷணம் கோகிலா மகேந்திரனின் "வரிக்குயில்" நூல் வெளியீடு, கலைஞர் கௌரவம், மாணவருக்குக் கற்றல் உபகரணம் வழங்கல் ஆகியவற்றுடன் நாட்டிய நாடகமும் சேர்ந்து நடந்த விழாவாக இது அமைந்தது. பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வடக்கு மாகாணக் கல்வியமைச்சர் மாண்புமிகு த. குருகுல ராஜா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாகப் பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் தம்பதியினர் கலந்து கொண்டனர். அருட்திரு. செ.அன்புராசா அடிகளாரின் ஆசியுரை, சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களின் தொடக்கவுரை ஆகியவற்றைத் தொடர்ந்து முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் நூல் வெளியீட்டுரை நிகழ்த்தினார். முனைவர் திருமதி. பகீரதி ஜீவேஸ்வரா ராசனன் நூல் மதிப்பீட்டுரை செய்தார். மூத்த இசைக் கலைஞர் சங்கீத பூஷணம் சு.கணபதிப்பிள்ளை அவர்களும், மூத்த எழுத்தாளர் க.சட்டநாதன் அவர்களும் கௌரவம் பெற்றனர். இராமநாதன் கல்லூரி மாணவிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிய நடனத்தைத் திருமதி. நந்தினி சிவராஜன் நெறியாள்கை செய்திருந்தார். திருமதி. சிவமலர் சுந்தரபாரதி நிகழ்வை நெறிப்படுத்தினார்.

09.09.2017 - தொண்ணூற்று நான்காவது ஒன்றுகூடல் - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

கலாபூஷணம் சு.செல்லத்துரையின் "நற்சிந்தனை 50" என்ற நூலும் ஒலிப்பேழையும், கலைப்பிரவாகம் திருமதி. கோகிலா மகேந்திரனின் "விஞ்ஞானக் கதைகள்" ஆகியவற்றின் வெளியீடாக இது அமைந்தது. மிக நீண்ட காலத்தின்பின் களத்தின் தொடக்க இடமான தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் புதிய மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது. வடமாகாணப் பிரதிப் பொதுச் செயலர் (நிதி) திரு. செ.உ.சந்திரகுமாரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வலி வடக்குப் பிரதேச செயலர் திரு. சி. சிவஸ்ரீ முதன்மை விருந்தினராகவும், யூனியன் கல்லூரி அதிபர் திரு. தி.வரதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். திருமதி. ராஜி கெங்காதரனின் வரவேற்புரை, பேராசிரியர் நா.சண்முகலிங்கனின் வாழ்த்துரை ஆகியவற்றுடன் நிகழ்வுகள் ஆரம்பமாயின. நற்சிந்தனை நூலின் வெளியீட்டுரையைச் சைவப்புலவர் ச.முகுந்தன் அவர்களும், விஞ்ஞானக் கதைகள் வெளியீட்டுரையைச் செல்வி. சிவதர்சினி ஜீவரத்தினம் அவர்களும் வழங்கினர். செல்வி. மு.ஜெயகௌரியின் களக்கீதத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

01.01.2018 - தொண்ணூற்றைந்தாவது நிகழ்வு - நூல் வெளியீடு - இணுவில் மத்திய கல்லூரி.

சமூகதிலகம் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களின் "திரு மனிதர் வாழ்வு" நூல் வெளியீட்டு விழாவாக இந்நாள் அமைந்தது. சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பேராசிரியர் க.சிவபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். திருமதி. ராஜி கெங்காதரன் அவர்கள் வரவேற்புரையும், பேராசிரியர் க. சிவபாலன் அவர்கள் வெளியீட்டுரையும் செய்தனர். நூல் அறிமுக உரைகளைக் கந்தர்மடம் அ. அஜந்தன், வைத்திய கலாநிதி ஜீ. புவனலோஜினி ஆகியோர் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08.04.2018 - தொண்ணூற்றாறாவது நிகழ்வு - அமுத விழா - இளவாலை மெய்கண்டான் ம.வி.

கலை இலக்கியக் களத் தலைவர் கலாபூஷணம் சைவப் புலவர் சு.செல்லத்துரை அவர்களின் அமுதவிழாவாக இது அமைந்தது. கலை இலக்கியக் களத்துடன் திருவாவடு துறை ஆதீனச் சைவ சித்தாந்தப் பயிற்சி மையம் இணைந்து நடத்திய இவ்விழாவுக்கு கலைப்பிரவாகம் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள் தலைமை ஏற்றார். சைவப்புலவர் அவர்களின் "வில்லிசைப் பாடல்கள்" என்ற நூல் வெளியிடப்பட்டது. வைத்திய கலாநிதி ந.இரவீந்திரன் இசைக்கலாவித்தகர் ந.ஸ்ரீராம்குமார், திரு. செ. உ. சந்திர குமாரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். சித்தாந்தரத்தினம் சிவஸ்ரீ சி.குமாரராசக் குருக்கள் அவர்களின் ஆசியுரை, இளவாலை மெய்கண்டான் ம. வி. அதிபர் திரு. இ.கணேசானந்தன் அவர்களின் வாழ்த்துரை ஆகியவற்றுடன் சைவப்புலவர் செ.நவநீதகுமார், சைவப்புலவர் சா.பொன்னுத்துரை, திரு. கா.வைத்தீஸ்வரன் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம் பெற்றன. பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன் வெளியீட்டுரை நிகழ்த்தினார். சைவப்புலவர் கு.றஜீபன் நூல் நயவுரை செய்தார். "மங்கையர் மாண்பு" என்ற வில்லிசையை இளவாலை மெய்கண்டான் ம.வி. பழைய மாணவிகள் நிகழ்த்தினர். திரு. செ. நாவரசன் நிகழ்வுகளை நெறிப்படுத் தினார். மதிய உணவு விருந்துபசாரத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

23-06-2018 - தொண்ணூற்றேழாவது ஆரம்ப நிகழ்வு - இணுவில் மத்திய கல்லூரி.

சோலைக்குயில் ஆற்றுப்படுத்தல் மையத்தின் மற்றொரு பயிற்சிப் பட்டறையின் ஆரம்ப நிகழ்வாக இது அமைந்தது. "வெற்றிகரமான வாழ்வுக்கான வழிமுறைகள்" என்னும் தலைப்பில் "ஏற்றுக்கொண்டு உன்னிப்பாயிருத்தல்" (ACT) வழிமுறைகளை உள்ளடக்கி இப்பயிற்சி ஆரம்பிக்கப் பட்டது. ஆரம்ப நிகழ்வில் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் தொடக்க உரை ஆற்றினார். கலாபூஷணம் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் பயிற்சி தொடர் பான விளக்கங்களையும் நோக்கங்களையும் குறிப்பிட்டார். மத்தியகுழு உறுப்பினர் திருமதி பாகீரதி கணேசதுரை அவர்கள் உச்சாடனப் பயிற்சி கொடுத்தார். ஏறத்தாழ 25பேர் பங்குபெறும் இப்பயிற்சி பிரதி ஞாயிறு தோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற்று வந்தது.

07.07.2018 - தொண்ணூற்றெட்டாவது நிகழ்வு - நூல் அறிமுக விழா - கொழும்பு தமிழ்ச்சங்கம்.

கலாபூஷணம் சு.செல்லத்துரை அவர்களின் வில்லிசைப் பாடல்கள் நூல் அறிமுக விழாவாக இது அமைந்தது. உடுவை தில்லை நடராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் திரு. நெறிய தமிழிசை வாணி ஹம்சானந்தி தர்மபாலன் அவர்கள் பஞ்சபுராணம் இசைத்தார். திரு. செ. உ.சந்திரகுமாரன் அவர்கள் வரவேற் புரை செய்தார். கலாபூஷணம் மேழிக்குமரன், க. க. அருந்தவராசா அவர்கள் நூல் அறிமுக உரை நிகழ்த்தினர். திருமதி. சுபாஷினி பிரணவன் அவர்கள் நூல் நயவுரை செய்தார். "சமநீதியே சரிநீதி" என்ற வில்லிசை கொழும்பு சைவ மங்கையர் கழக மாணவிகளால் நிகழ்த்தப்பட்டது. திருமதி. ராஜி கெங்காதரன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன. ஊடகவியலாளர் ஜீவா சதாசிவம் அவர்கள் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார். இனிய விருந்தினர்களாகத் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களும், திரு. அ. உமாமகேஸ்வரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

19-08-2018 தொண்ணூற்று ஒன்பதாவது நிகழ்வு - நாடகமும் உளவியல் கலந்துரையாடலும் - இணுவில் மத்திய கல்லூரி மண்டபம்.

புகழ்பூத்த ரஷ்ய நாடக ஆசிரியர் அன்ரன் செக்கோவ் அவர்களின் நாடகம் ஒன்று "தான் விரும்பாத் தியாகி" என்ற பெயரில் கலாநிதி ம. சண்முகலிங்கம் அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்நாடகத்தைக் கலாநிதி க. ரதிதரன் அவர்கள் நெறியாள்கை செய்திருந்தார். "வெற்றிகர மான வாழ்வுக்கான வழிமுறைகள்" என்ற உளவியல் பயிற்சியில் பங்குபெறும் மாணவர்களும் வளவாளர்களும் வேறு சிலரும் இந்நாடகத்தைப் பார்த்து அதன் பாத்திரங் களின் உளவியல் பண்புகள் குறித்த ஆழமான கலந்துரை யாடலில் ஈடுபட்டோம். கலந்துரையாடலைத் திருமதி கோகிலா மகேந்திரன் வழிப்படுத்தினார். இங்கிலாந்தில் இருந்து வருகை தந்திருக்கும் உளவியல் சிகிச்சையாளர் செல்வி. சியாமளா செல்வரத் தினம் அவர்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.

நூறாவது நிகழ்வு - இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களக்கீதம்

பாகீரதி கணேசதுரை

வாழ்க வாழ்கவே வைய மீதிலே வான்மதி போலவே
(வாழ்க)
தெல்லி நகர் விளங்கும் பல்திறன் படைக்கு மெங்கள்
தொல் கலை இலக்கியக் களம் சிறந்தோங்கி என்றும்
(வாழ்க)

கலைமலி வலிவடக்கில் எண்பதுகள் தனில் எழுந்து
மலைநிகர் மாண்புடனே தலைநிமிர்ந்த கலைக் கோயில்
அழகியலும் அறிவியலும் அரங்கியலாம் செந்நெறியும்
பழகுதற்கோர் பயில்களமாய் பாரிலென்றும் பணி சமைத்து
(வாழ்க)

ஏட்டினை ஆள்பவர்கள் இலக்கியம் படைப்பவர்கள்
வாட்டம் தனையறியா வாண்மை வளர்ப்பவர்கள்
பாட்டுடன் படம் வரைந்து பண்ணிசையும் பயில்பவர்கள்
ஈட்டும் படைப்புக்களை ஏற்றி வைக்கும் எங்கள் களம்
(வாழ்க)

ஆக்கத்திறன் ஆளுமைகள் ஆற்றுப்படுத்துகைகள்
பூக்கும் விளைநிலமாய் பொலிந்தே அழகொளிரும்
பார்த்து ரசிப்பதற்கும் பண்பை விதைப்பதற்கும்
ஊக்குவிக்கும் களம் உயர்ந்து ஊருணியாய் நிதம் நிறைந்து
(வாழ்க)

ஈழமணித் திருநாட்டில் எத்திசையும் தடம் பதித்து
வாழுமெங்கள் குலம் தழைக்க ஆவணங்கள் பல படைத்து
வாழ்வாங்கு வாழ்ந்த முதுகலைஞர் தமைக் கௌரவித்து
ஆழ்ந்தகன்ற தொலைநோக்கில் வீறுநடை போட்டுயர்ந்து.
(வாழ்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற திரு. கி. மகேந்திரராஜா அவர்களின் மணிவிழா நிகழ்வில் கலந்து கௌரவம் செய்த சைவப்புலவர் சு. செல்லத்துரை, திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரை தம்பதியினர் (2009)




கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற சோலைக்குயில் மலர் வெளியீட்டில் மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் எழுத்தாளர் திரு. ச. பொ. கனக சபாபதிக்குக் குரு வணக்கம் இடம்பெறுகிறது. (2010)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கலை இலக்கியக்கள நிகழ்வை அலங்கரித்த "செல்லிடத் தொலைபேசி" நாடகம். (2013)



மற்றொரு கலை இலக்கியக்கள நிகழ்வில் மகாஜனக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியை திருமதி ச. கனகேஸ்வரன் குரு வணக்கம் பெறுகிறார். (இணுவில் மத்திய கல்லூரி மண்டபம் - 2015)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம்

01. எமது காப்பாளர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் (முன்னாள் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர்)

02. எமது காப்பாளர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

03. எமது காப்பாளர் தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க முன்னாள் தலைவர் சி. சிவமகாராசா அவர்கள்

04. எமது காப்பாளர் முன்னாள் வட்டாரக்கல்வி அதிகாரி பொ. சிவஞானசுந்தரம் அவர்கள்

05. எமது மத்தியகுழு உறுப்பினர் கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்கள்

06. எமது மத்தியகுழு உறுப்பினர், இணைச் செயலர் கலைப் பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை அவர்கள்

07. எமது மத்தியகுழு உறுப்பினர், இயல் தமிழ்க்குழுத் தலைவர் கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்கள்

Educational Resource Centre
87, Kanahambigai...
Kilinochchi.

08. எமது மத்தியகுழு உறுப்பினர், பொருளாளர், சைவப்புலவர் அநு. வை. நாகராஜன் அவர்கள்

09. எமது மத்தியகுழு உறுப்பினர், இயல்தமிழ்க்குழுத் தலைவர் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்கள்

10. எமது உறுப்பினர் மு. சிவராஜா M.A (அதிபர்) அவர்கள்

11. எமது உறுப்பினர் ச. விநாயகரத்தினம் (முதன்மை ஆசிரியர்) அவர்கள்

12. எமது உறுப்பினர் திருமதி ச. கனகேஸ்வரன் (ஆசிரியர்) அவர்கள்

13. எமது உறுப்பினர், புலவர் ம. பார்வதிநாதசிவம் அவர்கள்

14. எமது ஆர்வலர் திருமதி செ. சிவகாமசுந்தரி அவர்கள்

15. எமது ஆர்வலர் திரு. செ. சிவசுப்பிரமணியம் (விழிசைச் சிவம்) அவர்கள்

16. எமது ஆர்வலர் பேராசிரியர் செ. சந்திரசேகரம் அவர்கள்

17. எமது ஆர்வலர் நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்கள்

18. எமது ஆர்வலர் த. இராசரத்தினம் (அதிபர்) அவர்கள்

19. எமது ஆர்வலர் கலாநிதி மு. கதிர்காமநாதன் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. எமது ஆர்வலர் எழுத்தாளர், முன்னைநாள் தெல்லிப்பழை பிரதேச செயலர் செங்கை ஆழியான் அவர்கள்
21. எமது ஆர்வலர், எழுத்தாளர், முன்னைநாள் தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம்போல் அவர்கள்
22. எமது ஆர்வலர் கலைஞர் ந. வீரமணி ஐயர் அவர்கள்
23. எமது ஆர்வலர் எழுத்தாளர் வரதர் அவர்கள்
24. எமது ஆர்வலர் எழுத்தாளர் செம்பியன் செல்வன் அவர்கள்
25. எமது ஆர்வலர் எழுத்தாளர் நெல்லை க. பேரன் அவர்கள்
26. எமது ஆர்வலர் எழுத்தாளர் நா. சோமகாந்தன் அவர்கள்
27. எமது ஆர்வலர் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள்
28. எமது ஆர்வலர் பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கள்
29. எமது ஆர்வலர் இலக்கணவித்தகர் இ. நமசிவாயதேசிகர் அவர்கள்
30. எமது ஆர்வலர் கலைஞர் திருமதி கமலினி செல்வராஜன் அவர்கள்.
31. எமது ஆர்வலர் கலைஞர் செல்வி சற்சொரூபவதிநாதன் அவர்கள்
32. எமது ஆர்வலர் கவிஞர் இ. முருகையன் அவர்கள்
33. எமது ஆர்வலர் கலைஞர் இ. சிவானந்தன் அவர்கள்
34. எமது ஆர்வலர் எழுத்தாளர் சொக்கன் அவர்கள்
35. எமது ஆர்வலர் கவிஞர் கல்வயல் செ. குமாரசாமி அவர்கள்
36. எமது ஆர்வலர் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள்
37. எமது ஆர்வலர் கல்வி அதிகாரி ஆ. கமலநாதன் அவர்கள்
38. எமது ஆர்வலர் கல்வி அதிகாரி சு. இரத்தினராசா அவர்கள்
39. எமது ஆர்வலர் எழுத்தாளர் து. வைத்திலிங்கம் அவர்கள்
40. எமது ஆர்வலர் க. இராஜதுரை (அதிபர்) அவர்கள்
41. எமது ஆர்வலர் எழுத்தாளர் சிற்பி சரவணபவன் அவர்கள்
42. எமது ஆர்வலர் எழுத்தாளர் சு. இராஜநாயகன் அவர்கள்
43. எமது ஆர்வலர் எழுத்தாளர் ச. பொ. கனகசபாபதி (அதிபர்) அவர்கள்
44. எமது ஆர்வலர் புலவர்மணி வை. க. சிற்றம்பலம் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Lebara Library
# Kilinochchi


## இரவல் வழங்கும் பகுதி

இப்புத்தகம் கீழ் குறிக்கப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். குறித்த தவணைக்குள் கொடுபடாத புத்தகம் ஒவ்வொன்றுக்கும் நாள் ஒன்றுக்கு குற்றப் பணமாக ரூபா 01/- அறவிடப்படும்.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org